# THIRUMARAI AASAAN


S. Rajanayagam

Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385


Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 30 Dec 2017 Issue - 12


ஆசிரியர் உரை

## ஒருவித ஜனம் சிதறுண்டு பரம்பியிருக்கிறார்கள் அவர்களுடைய வழக்கங்கள் விகற்பமாயிருக்கிறது

**ந**ம் தாய்மொழியாம் செம்மொழித் தமிழின் குன்றாத வளமைக்கான காரணங்களில் ஒன்று, பிறமொழி எழுத்துக்களைக் காலத்தின் தேவைக்கேற்ப உள்வாங்கிக் கொண்டு, அதே வேளையில் தன் தனிச்சிறப்பைத் துளியும் இழக்காமல் வளர்ந்து வந்திருப்பது. தமிழ் தாய் மொழி அப்படி உள்வாங்கிக் கொண்ட பிறமொழி எழுத்துக்களில் **ஜ ஸ ஷ** போன்றவை குறிப்பிடத்தக்கவைகள். இந்த எழுத்துக்களை உள்ளடக்கிய வார்த்தைகளைத் தமிழினம் பல்லாண்டுகளாகப் பேச்சிலும், எழுத்திலும் பயன்படுத்தி வருவதால், அவைகள் கிட்டத்தட்ட தமிழ் எழுத்துக்களாகவே மாறி நமக்குப் பரிச்சயமாகிவிட்டன. ஆகவே, இவ்வெழுத்துக்கள் அடங்கிய வார்த்தைகளின் பொருளைப் புரிந்து கொள்வதில் நமக்குப் பெரிதாகச் சிரமம் இருப்பதில்லை.

இப்பிறமொழி எழுத்துக்களைக் கொண்ட ஒரு வசனம் தான் ஆண்டு இறுதி மாத நம்முடைய தலையங்கத்திற்கான ஆதார வசனம். கவனியுங்கள், *அப்பொழுது ஆமான் அகாஸ்வேரு ராஜாவை நோக்கி உம்முடைய ராஜ்ஜியத்தின் சகல நாடுகளிலுள்ள ஜனங்களுக்குள்ளே ஒருவித ஜனங்கள் சிதறுண்டு பரவியிருக்கிறார்கள். அவர்களுடைய வழக்கங்கள் சகல ஜனங்களுடைய வழக்கங்களுக்கும் விகற்பமாயிருக்கிறது. அவர்கள் ராஜாவின் சட்டங்களைக் கைக்கொள்ளுகிறதில்லை. ஆகையால், அவர்களை இப்படி விட்டிருக்கிறது ராஜாவுக்கு நியாயமல்ல என்றான்* (எஸ்தர் 3:8). இவ்வசனத்தில் இடம்பெற்றுப் பரம்பியிருந்த ஒருவித ஜனங்களையும், அவர்களின் விகற்பமான வழக்கங்களையும் தான் நாம் கிட்டப் போய் பார்த்துத் தெரிந்துகொள்ள முயற்சிக்கப் போகிறோம்.

எந்த ஜனங்கள் இப்படியாகக் குறிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள நமது மாறாத வழக்கத்தின்படி இதன் பின்னணிக் காரியங்களுக்குள்ளாகப் புகுந்து வெளியே வருவோம்.

பழைய ஏற்பாட்டிலுள்ள சரித்திர நூல்களில் ஒன்றுதான் ஒரு பெண்ணின் பெயரைக் கொண்டுள்ள எஸ்தர் நூல். இந்நூலுக்கென்று ஒரு சிறப்பு உண்டு. தேவ ஆவியினால் அருளப்பட்ட இந்நூலில் தேவன், கர்த்தர், ஆண்டவர், பிதா போன்ற வார்த்தைகள் ஒருமுறை கூட இல்லை. ஒருவேளை, தேவநாமத்தைக் குறிக்கக் கூடிய இவ்வார்த்தைகள் இல்லாவிட்டாலும், அந்த தேவனுடைய ஜனங்கள் மீதான அவருடைய அன்பும், வழிநடத்துதலும், பாதுகாப்பும் வெளிப்படையாகவே விளக்கப்பட்டிருக்கிறது. சுமார் பத்து ஆண்டுகால நிகழ்வுகளைத் தன்னகத்தே கொண்டுள்ள இந்நூலின் காலம் எஸ்றா புத்தகத்தின் 6-ம் அதிகாரத்திற்கும் 7 -ம் அதிகாரத்திற்கும் இடையே பொருந்தி வருகிறதாக உள்ளது.

ஆம், தேவ அனுமதியோடு நேபுகாத்நேச்சாரல் அடிமைகளாகக் கொண்டுபோகப்பட்ட யூதஜனம் செருபாபேல் தலைமையில் முதல் முறையாகத் திரும்பி வந்தார்கள் (எஸ்றா 2-ம் அதிகாரம்). பிறகு, கொஞ்ச காலம் கழித்து எஸ்றாவின் தலைமையின் கீழ் திரும்பி வந்தார்கள். (எஸ்றா 7ஆம் அதிகாரம்). தாய் மண்ணுக்குத் திரும்ப முதல் முறை செருபாபேல் தலைமையின் கீழ் வாய்ப்பு வந்தபோது, அப்படி வர மனமற்ற வர்களாயிருந்த ஏராளமான யூதர்கள், அகாஸ்வேரு ராஜாவின் ஆளுகையின் கீழிருந்த 127 நாடுகளிலும் பரவிக்கிடந்து வாழ்ந்தார்கள். இந்த இடைவெளியில் தான் எஸ்தர் நூலின் சம்பவங்கள் அரங்கேறியுள்ளது.

நூற்று இருபத்தேழு நாடுகளைத் தன் கொடையின் கீழ் கொண்டிருந்த பேரரசன் அகாஸ்வேரு தன் குளிர்கால வாசஸ்தலமாகிய சூசான் அரமனையிலிருக்கிற சிங்காசனத்தின்மீது வீற்றிருந்து தன்னுடைய ராஜ்யபாரத்தின் மூன்றாம் வருஷத்தில், தன் சாம்ராஜ்ஜியத்தின் மகிமையான ஐசுவரியத்தையும், தன் மகத்துவத்தின் சிறந்த பிரதாபத்தையும் அநேக நாளாகிய நூற்றெண்பது நாளளவும் விளங்கச் செய்து, அதன் உச்சகட்டமாக, மகா ரூபவதியாயிருந்த ராஜஸ்திரீயாகிய வஸ்தியின் சௌந்தர்யத்தை ஜனங்களுக்கும், பிரபுக்களுக்கும் காண்பிக்கும்படி அவளை அழைத்து வரும்படி தன் ஏழு பிதானிகளுக்கும் கட்டளை கொடுத்தான். அரச கட்டளைக்கு அடிபணிய ராணி வஸ்தி மறுத்ததால், அந்நாட்டு வழக்கப்படி மகாராணி ஸ்தானத்திலிருந்து அவள் அதிரடியாய்த் தள்ளப்பட்டு, தேவ வழிநடத்துதல்படியும், தன் சிறிய தகப்பனாகிய மொர்தெகாயின் ஆலோசனையின் பேரிலும் அடிமைப் பெண்ணாகிய எஸ்தர் பட்டத்து ராணியானாள் (எஸ்தர் 1,2 அதிகாரம்).

அந்நாட்களில் காரணம் கொடுக்கப்படாத ஒரு காரணத்திற்காக ராஜாவாகிய அகாஸ்வேரு அம்மெதாத்தாவின் மகனாகிய அகம்பாவம் கொண்ட ஆமானை செய்வதறியாமல் மேன்மைப்படுத்தி, பிரபுக்கள் எல்லோருக்கும் மேலாக ஆசனத்தை உயர்த்தி வைத்தான். இதினிமித்தம் ராஜாவின் ஊழியக்காரர் அனைவரும் புதுப்பவிசு கண்ட ஆமானை விழுந்து வணங்கினார்கள். ஆயினும், விதிவிலக்காக ஒற்றை யூதனாகிய மொர்தெகாய் வணங்க மறுத்து நெஞ்சு நிமிர்த்தி நின்றான். அப்படி, நின்றதற்கான அடிப்படை பரலோகத்தின் வணங்க மறுத்ததற்கு அதிகார எதிர்ப்போ, அரமனைத் துரோகமோ அல்ல.

தேவனைத் தவிர வேறு யாரையும், வேறு எதையும் ஒருபோதும் வணங்கக் கூடாது என்ற தேர்ந்த தெளிவுதான் (யாத்.20:3-5). மொர்தெகாயின் வேறு இப் பக்தித் தீர்மானம் சக ஊழியர்கள் மூலம் ஆணவம் மிகுந்த ஆமானின் காதுகளுக்கு எட்டியது.

அதிகாரப் போதை தலைக்கேறி அகம்பாவம் என்ற இறக்கை புதிதாக முளைத்து வானுயரப் பறந்துகொண்டிருந்தபடியால் மொர்தெகாயின் மீது மூர்க்கங் கொண்டதோடு (எஸ்தர் 3:1-5). கட்டுக்கடங்காத அதிகாரம் தன் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தபடியால், மொர்தெகாயின் மீது மட்டும் கைபோடுவது தனக்கு அற்ப காரியம் என்று கண்டு, ஒட்டுமொத்த யூதரையெல்லாம் சங்கரிக்கச் சமயம் தேடி ஆழம் தெரியாமல் காலை விட்டான் (எஸ்தர் 3:5-7). தான் சாதுரியமாகச் செயல்படுவதாகக் குஷ்டன் நாகமான் போல் தனக்குள்ளாக நினைத்துக்கொண்டு (2இராஜா.5:11) தனக்குத் தானே படுகுழியை வெட்டிக்கொண்டான் துஷ்டன் ஆமான். தான் தீட்டின திட்டத்தின் படி ராஜாவை சந்தித்து, யூதர்களை *ஒருவித ஜனம்* என்றும் அவர்களது பக்தி நெறி சார்ந்த வழக்கங்களை *விகற்பமானவைகள்* என்று கூறியதோடு, அவர்கள் தேசச் சட்டங்களை கைக்கொள்ளுகிறதில்லை என்று *ஓங்கி ஒரே போடாகப் போட்டு* அவர்களை இப்படி விட்டு வைப்பது நியாயமல்ல என்றான் (எஸ்தர் 3:8). நியாய அநியாயம் பேசுகின்ற மனிதனின் இலட்சணத்தைப் பாருங்கள். என்ன செய்வது? நாம் வாழ்வது பூமியாயிற்றே!

தூஷ்டன் ஆமானின் சதித்திட்டம் தற்காலிகமாக நிறைவேறி, அந்த ஜனத்துக்கு உன் இஷ்டப்படி செய்யலாம் என்று ராஜாவின் அதிகாரப்பூர்வ அனுமதியும் கிடைத்துவிட்டது. அநியாயங்களுக்குத் தற்காலிக வெற்றி கிடைப்பது அன்றும், இன்றும் நடந்து கொண்டுதான் உள்ளது. தனக்கே கேடுண்டாகப் பிறனை ஆள்கிறான் (பிரசங்கி8:9) என்ற ஞானியின் கூற்றுப்படி இவனுக்குக் கேடு ஆரம்பமாகிவிட்டபடியால் ஆதார் மாதமான பன்னிரெண்டாம் மாதம் பதிமூன்றாம் தேதியாகிய ஒரே நாளிலே பெரியோர் சிறியோர் குழந்தைகள் ஸ்திரீகள் ஆகிய சகல யூதரையும் அழித்துக் கொன்று நிர்மூலமாக்கவும், அவர்களைக் கொள்ளையிடவும் ராஜாவின் நாடுகளுக்கெல்லாம் கட்டளை பிறந்தபடியால் சூசான் நகரம் கலங்கிற்று (3:11-15).

அப்பொழுது தெளிந்த பக்தியும், தேர்ந்த ஞானமும், அசராத நெஞ்சுரமும் கொண்ட யூதன் மொர்தெகாய் தன் வஸ்திரங்களைக் கிழித்து, இரட்டுடுத்தி அரமனை வாசல் முகப்பு மட்டும் வந்து சாதுரியமாகச் செயல்பட்டு எஸ்தர் ராணியின் காதுகளுக்கு இத்துயரச் செய்தியை கொண்டுபோய்ச் சேர்த்து, தயக்கம் காட்டின எஸ்தரைத் துணிந்து செயல்பட வைத்து (5:14-17) தேவனுடைய பராமரிப்பின்படி, 127 நாடுகளிலிருந்த ஒட்டுமொத்த யூதருக்கும் வெளிச்சமும் களிப்பும் மகிழ்ச்சியும் கனமும் உண்டாகும்படி செய்தான் (8:16). தேவன் அவருடைய ஜனங்களை ஒருபோதும் கைவிடுவதில்லை என்பதற்கு இதைவிடச் சிறந்த சான்று தேவையில்லை. ஆம், ஒரு கட்டத்தில் தன்னுடைய சதித்திட்டங்களுக்கு மாறாக காரியங்கள் தலைகீழாக நடக்கிறதென்று தன் மனைவிக்கும், சிநேகிதருக்கும் அறிவித்தபோது, அவர்கள் அத் துஷ்டனைப் பார்த்து,

மொர்தெகாய்க்கு முன்பாக நீர் தாழ்ந்து போகத் தொடங்கினீர். அவன் யூத குலமானால், நீர் அவனை மேற்கொள்ளாமல் அவனுக்கு முன்பாக நீர் தாழ்ந்து போகத் தொடங்கினீர். அவன் யூத குலமானால், நீர் அவனை மேற்கொள்ளாமல் அவனுக்கு முன்பாகத் தாழ்ந்து போவது நிச்சயம் என்றார்கள் (6:13). இப்படி யூதகுல தேவனுடைய வல்லமையை அவர்கள் அறிந்து உணர்ந்து அறிக்கையிட்டார்கள்.

சரி, அருமையானவர்களே! இவ்வருட இறுதிக்கான ஆசிரியர் உரைக்கு எஸ்தர் சரித்திர நூலையும், அதில் உள்ள ஒரு வசனத்தையும் நான் தொட்டபடியால் இந்நூலின் சம்பவங்களை நினைப்பூட்டுதலாய் உங்கள் மனக்கண்களுக்கு முன்பாகக் கொண்டு வந்தேன் அவ்வளவே! மற்றபடி ஒட்டுமொத்த நூலிலும் நம் கவனத்தைச் செலுத்தப் போவதில்லை. மாறாக, எஸ்தர் 3:8-ல் இடம் பெற்றுள்ள சிதறுண்டு பரம்பியிருக்கிற ஒருவித ஜனம் மற்றும் அவர்களுடைய வழக்கங்கள் விகற்பமாயிருக்கிறது என்னும் சொற்றொடர்களில் நம்முடைய சிந்தையைச் செலுத்தி சில உண்மைகளைப் புரிந்து கொள்ளப் போகிறோம். சரியா!

எப்படி எஸ்தரின் நாட்களில் அதிகம் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படாத யூதர்கள் 127 நாடுகளில் சிதறியிருந்தார்களோ அதுபோலவே, ஒட்டுமொத்த உலகத்தின் கவனத்தையும் ஒட்டுமொத்த கிறிஸ்தவ சமுதாயத்தின் கவனத்தையும் தன் பக்கம் ஈர்க்க முடியாத, கிறிஸ்து இயேசுவின் புதிய ஏற்பாட்டு சுவிசேஷத்தின் உபதேசத்திற்குத் தங்களை முழுக்க முழுக்க ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவின் சபை விசுவாசிகள், இன்றய உலகில் காணப்படும் கிட்டத்தட்ட எல்லா நாடுகளிலும் சிதறிப் பரம்பியிருக்கிறார்கள். ஒட்டுமொத்த உலகமும், உலகெங்கிலுமுள்ள கிறிஸ்தவ சமுதாயமும் ஆமானின் கண்ணாடியைப் போட்டுக் கொண்டு இவர்களைப் பார்க்கிறபடியால் இவர்கள் எல்லாரிலும் ஒருவித ஜனமாகவே அதாவது வித்தியாசமாக வேறுபட்டவர்களாகக் காணப்படுகிறார்கள். அதுமட்டுமல்ல அந்த துஷ்ட ஆமான் குறிப்பிட்டது போல, உலகெங்கிலுமுள்ள கிறிஸ்துவின் சபையாருடைய பழக்கங்கள், ஏனைய கிறிஸ்தவ சமுதாயத்தின் ஒட்டுமொத்த பழக்கங்களுக்கு விகற்பமாயிருக்கிறதென்றும் எண்ணுகிறார்கள், உண்மைதான். ஆனால் எஸ்தரின் காலத்தில் வாழ்ந்த யூதர்கள் விகற்பமான வழக்கங்களைக் கொண்டவர்கள் என்று ஏன் தீர்க்கப்பட்டார்கள்? மோசேயின் பிரமாணங்களைக் கைக்கொண்டதைத் தவிர வேறெந்தப் பாவமும் அவர்கள் செய்யவில்லை. அதுபோலவே, இன்றைய கிறிஸ்துவின் சபையாரை ஏனைய கிறிஸ்தவ உலகம் இவர்கள் விகற்பமானவர்கள் என்று முத்திரை குத்துவதற்கு என்ன காரணம்? கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்தை முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களைப் போல இவர்கள் பின்பற்றுகிறார்கள் என்பதைத் தவிர வேறு என்ன காரணங்கள் இருக்கிறது.

இப்படி ஏனைய கிறிஸ்தவ உலகத்தைக் காட்டிலும் ரோமர் 16:16-ல் குறிப்பிடப்படும் கிறிஸ்துவின் சபையார் எவைகளிளெல்லாம் வேறுபட்டு இருக்கிறார்கள் என்று எல்லாவற்றையும் இங்கே பார்க்கமுடியாது. ஆயினும், ஒரு சிலவற்றைக் காண நாம் முயற்சிப்போம்.

## I. சபை ஒன்றுதான் என்பதில் விகற்பமாயிருக்கிறார்கள்

இன்றைய கிறிஸ்தவ சமுதாயத்தில், விகற்பமான வழக்கங்களைக் கொண்டிருக்கிற ஒருவித ஜனமாகக் கருதப்படும் *கிறிஸ்துவின் சபையார்*, சபை ஒன்றுதான் என்பதில் வேறுபட்டிருக்கிறார்கள் என்று முதலாவதாகத் தெரிந்து கொள்வோம்.

நம்முடைய நாட்களில் பல்லாயிரக்கணக்கான சபைப் பிரிவுகள் உலகெங்கிலும் காணப்படுகிறது. மக்கள் தொகைக் கணக்கெடுப்பு போல இது மாறிக்கொண்டே போகிறது. இப்படி எண்ணில் அடங்காமல் காணப்படும் எல்லாச் சபைகளும் தேவனைத்தான் மகிமைப் படுத்துகின்றன. எல்லாச் சபையாரும் வேதாகமத்தைத் தான் கையில் வைத்திருக்கிறார்கள். ஆகவே, சபை பாகுபாடு கூடாது என்பது கிறிஸ்தவத்தில் காணப்படும் பொதுவான கருத்து. சொல்லப்போனால், மிகப்பெரும்பாலோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் கருத்து.

இக்கருத்தை இப்படிப் போட்டுப் பாருங்கள், கிறிஸ்தவம் தவிர்த்து உள்ள மற்ற மதங்களைச் சார்ந்த ஆன்மீகவாதிகள், எல்லா மதங்களும் ஒன்றுதான். எப்படி எல்லா நதிகளும் கடலில் போய் கலக்கின்றனவோ அது போல் எல்லா மதங்களும் இறுதியில் ஓரிடத்திற்குதான் போகின்றன என்று கூறுகிறார்கள். ஆனால், இக்கூற்றை கிறிஸ்தவ சமுதாயம் ஏற்றுக்கொள்ளாமல், கிறிஸ்தவத்தை எல்லா மதங்களோடும் ஒப்பிடக் கூடாது என்று பலமாக வாதிடுகிறது நியாயம்தான். ஆனால், எல்லா மதங்களும் ஒன்றல்ல என்று வாதிடும் கிறிஸ்தவம், எல்லாச் சபைகளும் ஒன்றுதான் என்று சத்தமில்லாமல் ஒத்துக்கொள்கிறதே. இது எப்படி நியாயமாகும்? புரியவில்லையே!

கண்டிப்பாக, எல்லாச் சபைகளும் ஒன்றல்ல. சர்வவல்ல தேவனால் திட்டமிடப்பட்டு (எபே.3:9-11). தீர்க்கதரிசிகளாலே முன்னுரைக்கப்பட்டு (ஏசாயா 2:2: தானி. 2:44) யோவான் ஸ்நானகால் பிரசங்கிக்கப்பட்டு (மத்.3:2) இரட்சகராகிய இயேசுவால் பிரசங்கித்து (மத்.4:17) வாக்களிக்கப்பட்டு (மத். 16:18) அவர்தம் சொந்த இரத்தம் சிந்தி (அப்.20:28) வாங்கப்பட்டு தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதலாய் எருசேலம் நகரில் பலத்த செய்கைகளோடு (அப்.2:1-4) கி.பி. 30-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு கிறிஸ்துவைத் தலைவராகக் கொண்டு (எபே. 1:23), வேதாகமத்திலும் பெயர் சொல்லிக் குறிப்பிட்டுள்ள (ரோமர் 16:16) கிறிஸ்துவின் சபையும், மாந்த அறிவின்படி சரித்திரத்தின் பல்வேறு காலகட்டங்களில், வித்தியாசமான இடங்களில் ஆரம்பிக்கப்பட்டு, மனிதத் தலைமைகளைக் கொண்ட சபைப் பிரிவுகளும் எப்படி ஒன்றாக முடியும்? சொல்லுங்கள். எப்படித்தான் ஒன்றாக முடியும்? ஒருபோதும் ஒன்றாக முடியாது. உண்மை இப்படியாக இருக்கும்போது எல்லாச் சபைகளும் ஒன்று என்று இன்றைய கிறிஸ்தவம் எதை வைத்து ஏற்றுக்கொள்கிறது. உங்களுக்குப் புரிந்தால் வேத ஆதாரங்களோடு சொல்லுங்களே!

அப்படியானால், ஏராளமாயிருக்கும் சபைப்பிரிவுகளில் எந்த சபை சரி என்று எப்படித் தெரிந்துகொள்ள முடியும். என்று நீங்கள் கேட்கலாம். நியாயமான கேள்விதான். நம்மீது கரிசனை கொண்ட தேவன் எல்லாவற்றையும் தெளிவோடுதான் செய்திருக்கிறார். ஆகவே

மனமிருந்தால் மார்க்கமுண்டு மனிதர்களாகிய நாம் தேவனுக்கென்று எதையாவது செய்யவேண்டுமென்று அவர் விரும்பியபோதெல்லாம் அதற்கான மாதியைக் கொடுத்தே உள்ளார். பேழை கட்டுவதற்கு நோவாவுக்கு மாதிரியைக் கொடுத்தார் (ஆதி.6:13-16,22). ஆசரிப்புக் கூடாரம் கட்டுவதற்கு மோசேக்கு மாதிரியை கொடுத்தார் (யாத்.25:9,40 எபி 8:5). தேவாலயம் கட்டுவதற்கு தாவீக்கும், சாலமோனுக்கும் மாதிரியைக் கொடுத்தார். ( நாளா . 28:11, 12,19,20). அது போலவே, கிறிஸ்துவால் வாக்களிக்கப்பட்ட சபைக்கும் மாதிரியைக் கொடுத்துள்ளார் அந்த மாதிரி புதிய ஏற்பாடுதான் ஆக, புதிய ஏற்பாடு என்ன சொல்லுகிறதோ அந்த உபதேசத்தை அப்படியே அட்சாரம் பிசகாமல் பின்பற்றினால், புதிய ஏற்பாட்டு சபையை மீட்டமைக்க முடியும் அந்த புதிய ஏற்பாட்டு சபையில் கிறிஸ்துவின் உபதேசங்களுக்குக் கீழ்ப்படிகிறவர்கள் தான் பரலோகம் செல்ல முடியும். எப்படியெனில், கிறிஸ்துவின் வருகையில் அந்த ஒரு சபையாகிய இராஜ்ஜியத்தைத் தான் தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ஒப்புக்கொடுப்பார் ( கொரி 15:24). இவ்வுண்மையைப் புரிந்து, தேவனுக்குப் பயந்து செயல்படுவோம்.

ஆகவே, இவ்வுண்மைகளைப் புரிந்து நம் பக்தி வாழ்வில் எவைகளைச் செய்ய வேண்டுமோ அவைகளெல்லாவற்றையும் செய்ய தேவன் நமக்கு கிருபை அளிப்பாராக!

### II. பாடல் காரியங்களில் விகற்பமாயிருக்கிறார்கள்

இன்றைய கிறிஸ்தவ சமுதாயத்தில் விகற்பமான வழக்கங்களைக் கொண்டிருக்கிற ஒருவித ஜனமாகக் கருதப்படும் *கிறிஸ்துவின் சபையார்* தேவனைத் துதித்துப் பாடுவதில் வேறுபட்டிருக்கிறார்கள் என்று இரண்டாவதாகத் தெரிந்து கொள்ளுவோம்.

தேவக் காரியங்களில் எது சரி, எது தவறு என்று தீர்மானித்துச் செயல்படுவதற்கு பெரும்பான்மையை நாம் அளவு கோலாகக் கொள்ளாமல் (யாத்.23:2), ஒன்றைப்பற்றி வேத வசனங்கள் என்ன சொல்லுகிற தென்றே பார்க்க வேண்டும். பாடும்போது இசைக்கருவிகளைப் பயன்படுத்தலாமா வேண்டாமா என்பதைத் தீர்மானிப்பதற்கு இப்படிப்பட்ட சிந்தனை தான் மேலோங்கி இருக்க வேண்டும்.

இசைக் கருவிகள் என்று வரும்போது நமக்குச் சட்டென நினைவுக்கு வருபவர் தாவீதுதான். தாவீது இசைக் கருவிகளைப் பயன்படுத்தி தேவனைத் துதித்தான் என்று சங்கீதங்களில் நாம் வாசிக்க முடியும். உண்மைதான் இல்லையென்று மறுக்கவில்லை. ஆனால், சிலுவைக்கு முன்னால் பழைய பிரமாணத்தின் கீழ் வாழ்ந்த தாவீது செய்த எல்லாவற்றையும் சிலுவைக்குப் பின்னால் வாழும் நாம் செய்வதற்கு அனுமதியில்லை. உதாரணத்திற்கு, தாவீது போல நம்முடைய ஆராதனையில் நாம் மிருக பலி செலுத்த முடியுமா? தாவீது போல பல மனைவிகளைக் கட்டிக்கொள்ளத்தான் அனுமதிக்கப்பட்டிருக்கிறோமா? சொல்லுங்கள். ஆமோஸ் தீர்க்கனுடைய நாட்களில் இசைக்கருவிகள் சம்மந்தமாக தேவன் தன்னுடைய கருத்தை ஆவியானவர் மூலமாக எவ்விதம் பதிவு செய்திருக்கிறார் என்று பாருங்கள். தம்புரை வாசித்துப் பாடி தாவீதைப் போல் கீதவாத்தியங்களைத் தங்களுக்கு உண்டு பண்ணுகிறவர்களுக்கு ஐயோ என்று (ஆமோஸ் 6:1-6). இப்படிப்பட்ட வெளிப்பாடுகள் கூட நமக்கு உணர்வைத் தரவில்லையென்றால் நம்மை யாரும் எதுவும் செய்ய முடியாது.

அருமையானவர்களே, சிலுவைக்குப் பின்னால் வாழக்கூடிய நம்மைக் கட்டுப்படுத்துவது புதிய ஏற்பாடுதான். பழைய ஏற்பாடு நமக்கு போதனையாகவும், எச்சரிப்பாகவும் உள்ளது. (ரோமர் 15:4; 1கொரி. 10:1). இப் புதிய ஏற்பாட்டுப் போதனையின்படி பாடும்போது இசைக் கருவிகளோடு பாட வேண்டுமென்ற கட்டளையோ அல்லது ஏதாவது ஒரு சபையார் இசைக்கருவிகளோடு பாடினார்கள் என்ற முன்னுதாரணமோ உண்டா? ஏதாவது காட்டுங்கள் பார்க்கலாம். பவுலடியார் எபேசு பட்டணத்து மூப்பர்களிடம் பேசும்போது *பிரயோஜனமானவைகளில் ஒன்றையும் மறைத்து வைக்கவில்லை* (அப்.20:20) என்கிறார். பேதுரு அப்போஸ்தலன் ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய திவ்ய வல்லமை நமக்குத் தந்தருளியுள்ளது என்று குறிப்பிடுகிறார் (1பேதுரு 1:3). பவுலடியாரின், பிரயோஜனமானவைகளிலும் பேதுருவின் ஜீவனுக்கும், தேவபக்திக்கும் தேவையானவைகளிலும் இசைக்கருவிகள் இடம் பெறவில்லை. தேவனைத் துதிப்பதற்கு இசைக் கருவிகள் தேவையில்லையென்று தேவ ஆவியானவர் எண்ணும்போது இல்லையில்லை அது தேவைதான் என்று சொல்லுவதற்கு நாம் யார்?

அப்படியானால், எப்படித்தான் பாடவேண்டுமென்ற கேள்வி இங்கே எழுகிறது. பவுலடியார் எபேசியருக்கு எழுதும்போது, சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுக்களினாலும் ஒருவருக் கொருவர் புத்திசொல்லிக் கொண்டு உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணுங்கள் (எபே.5:19) என்கிறார். எபிரெயர் ஆசிரியர், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரப் பலியைச் செலுத்த வேண்டும் என்கிறார் (எபி.13:5). இசையை இருதயத்திலிருந்தும், இசைக் கருவிகளிடமிருந்தும் உண்டாக்க முடியும். இருதய இசை தேவனால் உண்டாக்கப்பட்ட குரல் நாளத்திலிருந்து வருகிறது. கருவிகளைக் கொண்டு உண்டாக்கப்படும் இசை மனிதனால் உண்டாக்கப்பட்ட இசைக் கருவிகளிலிருந்து வருகிறது. இப்பொழுது சொல்லுங்கள் தேவனைத் துதிப்பதற்கு தேவ படைப்பு ஏற்றதா அல்லது மனிதக் கண்டுபிடிப்பு சிறந்ததா? அது மட்டுமல்ல, உயிருள்ள ஒன்றிலிருந்து வருவது நல்லதா அல்லது உயிரற்ற ஒன்றிலிருந்து வருவது சிறந்ததா?

ஆகவே, இந்த விகற்பமான வழக்கங்களைக் கொண்ட ஒருவித ஜனங்களைக் குறை சொல்வதை நிறுத்திவிட்டு தேவ வார்த்தைக்குத் தலை வணங்கத் தீர்மானிப்போம்.

### III **பண்டிகைக் காரியங்களில் விகற்பமாயிருக்கிறார்கள்**

இன்றைய கிறிஸ்தவ சமுதாயத்தில் மற்ற எல்லாரைக் காட்டிலும் விகற்பமான வழக்கங்களைக் கொண்டிருக்கிற ஒருவித ஜனமாகக் கருதப்படும் கிறிஸ்துவின் சபையார் பண்டிகைக் கொண்டாட்டங்களில் வேறுபட்டிருக்கிறார்கள் என்று மூன்றாவதாகத் தெரிந்துகொள்வோம்.

உலகெங்கிலும் வாழும் ஒட்டுமொத்த மானிட சமுதாயத்திற்கு விழா என்பது விருப்பமான ஒன்றே. எவ்வித வேறபாடுமின்றி விழா என்ற வார்த்தையைக் கேட்டவுடன் எல்லோருக்கும் ஒரு குஷி உண்டாகிறது. வியாதிப்படுக்கையிலிருப்பவர்களைக் கூட இதன் தாக்கம் விட்டு வைப்பதில்லை. தேசம், இனம், மொழி, மதம், கலாச்சாரம் என்று எதுவும் இதன் குதூகலத்திற்குக் குறுக்கே நிற்க முடிவதில்லை. இந்தக் குதூகல உணர்வுக்கு உலகெங்கிலுமுள்ள கிறிஸ்தவமும் விலை போயுள்ள தென்பதை நினைத்து வேதனைப்படாமல் இருக்கமுடியவில்லை.

இதிலே வேதனைப்படுவதற்கு என்ன இருக்கிறது? பழைய ஏற்பாட்டின் காலத்தில் கர்த்தரே பண்டிகை கொண்டாட வேண்டுமென்று கட்டளையிட்டிருக்கிறாரே என்று யாத். 23:6; லேவி. 23:4-8 போன்ற வசனப் பகுதிகளை நீங்கள் மேற்கோள் காட்டலாம். உண்மைதான் மறுக்கவில்லை. ஆனால், அவை பழைய ஏற்பாடு என்பதை மறந்துவிடாதீர்கள். பழைய ஏற்பாடு சிலுவையில் ஆணியடித்து முடிக்கப்பட்டுவிட்டது. (கொலோ. 2:14,15). கிறிஸ்துவின் சிலுவைக்குப் பின்னால் வாழும் மக்களுக்காகக் கொடுக்கப்பட்ட புதிய ஏற்பாட்டில் பண்டிகை பற்றிய பேச்சோ, மூச்சோ இல்லையென்பது உங்கள் நினைவிலிருக்கட்டும். அப்போஸ்தலனாகிய பேதுருவோ, யோவானோ, பவுலடியாரோ ஆவியின் ஏவுதலால் தாங்கள் எழுதிய நிருபங்களில் பண்டிகை கொண்டாடுவது பற்றி எதுவுமே குறிப்பிடவில்லை. பழைய ஏற்பாட்டிலே கொடுத்த தேவன் புதிய ஏற்பாட்டில் ஏன் கொடுக்க வில்லையென்று நீங்கள் கேட்டால் என்னிடத்தில் பதில் இல்லை. ஒருவேளை பக்தன் யோபு போல இப்படிச் சொல்வேன். **கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார், கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்று.** தேவன் செய்பவை பற்றி கேள்வி கேட்க நாம் யார்? சொல்லுங்கள்!

அப்படியானால், இயேசுவின் பிறப்பின் நாளையும், உயிர்த்தெழுந்த நாளையும் சிறப்பானதாகக் கருதிக் கொண்டாடக் கூடாதா என்று கேட்கிறீர்கள் அப்படித்தானே! கிறிஸ்தவத்தில் என்ன செய்ய வேண்டும் என்ன செய்யக் கூடாது என்று கூறுவதற்கு கிறிஸ்துவைத் தவிர வேறு யாருக்கும் அதிகாரம் இல்லை. ஆயினும், கிறிஸ்துவின் புதிய ஏற்பாடு என்ன சொல்லுகிறதென்று தெரிந்துகொள்ள நம்மால் கூற முடியும். ஏனெனில், அந்தப் புதிய ஏற்பாடு தான் நம்மைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கப்போகிறது (யோவான்12:48). கிறிஸ்துவின் அதிகாரம் கொண்ட புதிய ஏற்பாடு, இயேசுவானவர் பெத்லகேமில் பிறப்பார் என்றுதான் கூறுகிறதேயொழிய எந்த நாளில், மாதத்தில், வருடத்தில் பிறந்தார் என்று கூறுவதில்லை. ஆதியாகமத்தின் நாட்களில் ஏழாம் மாதம் பதினேழாம் தேதியில் நோவாவின் பேழை அரராத் மலையின் மேல் தங்கிற்று என்று ஆவியானவரைக் கொண்டு வெளிப்படுத்தின தேவன் (ஆதி.8:4), புதிய ஏற்பாட்டில் இயேசு எப்பொழுது பிறந்தார் என்று ஏன் துல்லயமாக வெளிப்படுத்தவில்லை? *கொப்பேர் மரத்தால் ஆன நோவாவின் பேழையைக் காட்டிலும் பரிசுத்த ஆவியினால் உற்பவித்துப் பிறந்த தேவக் குமாரனாகிய இயேசுவின் பிறப்பு தேவனுக்கு அவ்வளவு முக்கியமில்லாத ஒன்றாகப் போய்விட்டதா?* எப்போதாவது இது குறித்துச் சிந்தித்துள்ளோமா?

இன்னும், என்னை நினைவுகூருங்கள் என்று சொன்ன நம் இரட்சகர் இயேசு, அப்படி நினைவு கூருவதற்கு அவரது தியாகமான இறப்பைத் தான் முன்னிறுத்தினாரேயொழிய தன்னுடைய பிறப்பை அல்ல ( 1 கொரி. 11:23-25). இப்படிப்பட்ட வேத வசனங்களை நாம் அற்பமாக எண்ணாமல் அவைகளின் உட்பொருளை கவனமாகச் சிந்தித்து பண்டிகைக் கொண்டாட்டங்களில் வேத வசனங்களின் போதனைகளை ஒட்டி நம்முடைய செயல்பாடுகள் இருக்கிறதா என்பதை உறுதி செய்து கொள்ளுவோம். காணாதவைகளில் நாம் துணிவாய் நுழைய வேண்டாம்.

## கைகளை வைத்துப் பெற்றுக் கொள்ளும் அளவிலான பரிசுத்த ஆவியானவரின் வல்லமை

Bro. J.C. சோட்

பரிசுத்த ஆவியானவரின் பணி அல்லது கிரியைகள் பற்றிய தொடரில் நாம் இப்போது கைகளை வைத்துப் பெற்றுக்கொள்ளும் அளவிலான பரிசுத்த ஆவியானவரின் வல்லமை பற்றிப் பார்ப்போம். இப்பொருள் பற்றி நிறைய தவறான கருத்துக்களும், பல கள்ள உபதேசங்களும் உலா வருவதால், நாம் இதை விரிவாக அலசிப் பார்க்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

தேவனால் அனுப்பப்பட்டவர் தேவனுடைய வார்த்தைகளைப் பேசுகிறார்: தேவன் அவருக்குத் தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார். பிதாவானவர் குமாரனில் அன்பாயிருந்து எல்லாவற்றையும் அவர் கையில் ஒப்புக் கொடுத்திருக்கிறார் எனக் கிறிஸ்துவைப் பற்றி யோவான் கூறினார் (யோவான் 3:34, 35). அதாவது, ஆவியின் வல்லமையை கிறிஸ்து அளவற்ற விதத்தில் பெற்றார் அல்லது ஆவியை பயன்படுத்துவற்கு அவருக்கு வரையறை இல்லை. கிறிஸ்து அளவில்லாமல் ஆவியைப் பெற்றிருந்தார் என்று கூறும்போது, பிறர் ஆவியை அளவோடு பெற்றிருந்தார்கள் என்பது பொருளாகும். எனவே, ஆவியானவரின் வல்லமை அவர்களுக்கு இருந்தபோதிலும், அந்த வல்லமையால் செய்யக்கூடிய காரியங்களுக்கு ஓர் அளவு இருந்தது.

உதாரணமாக, பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் திருமுழுக்கு அளிக்கும் வல்லமை கர்த்தருக்கு இருந்தது என நமது பாடங்களில் நாம் பார்த்திருக்கிறோம் (மத். 3:11). பிரிசுத்த ஆவியின் வல்லமையை அவர் அளவில்லாமல் பெற்றிருந்தார். (மத். 3:12-17). இந்த திருமுழுக்குகளை அவர் மட்டுமே கொடுக்க வல்லவராக இருந்தார் என்பதை தயவு செய்து நினைவில் கொள்ளுங்கள்.

பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கைப் பற்றிக் கூறும்போது, முதலில், அப்போஸ்தலர்களுக்கு மட்டுமே தேற்றரவாளனை அனுப்புவதாக கிறிஸ்து வாக்களித்திருந்தார். ( யோவான் 14:26) . அந்த வாக்குத்தத்தம் லூக் 24:49 லும், அப் 1:8 லும் மீண்டும் கூறப்பட்டது. பின்னர், அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியின் திருமுழுக்குப் பெற்றதாகப் படிக்கிறோம். இது திருமுழுக்கின் அளவிலான பரிசுத்த ஆவி. ஒரு காரணத்திற்காக அவர்கள் அதைப் பெற்றுக்கொண்டிருந்தபோதிலும், அவர்கள் மற்றவர்களுக்கு பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கைக் கொடுக்க இயலாதிருந்தனர். அப்படியானால், அவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவரின் வல்லமை அந்த அளவிற்கு மட்டுமே கிடைத்திருந்தது.

ஆனால், அப்போஸ்தலர்கள் பன்னிரண்டு பேர் மட்டுமே இருந்தனர். அவர்கள் உலகெங்கும் போய் நற்செய்தியை அறிவிக்கக் கட்டளையிடப்பட்டிருந்தனர். அதாவது, அவர்களின் கரங்களில் ஒரு பெரும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதுமட்டுமல்லாமல், சீடர்களின் உலகத் தேவைகளைக் கவனிக்கும் வேலையிலும் அவர்கள் தங்களை

ஈடுபடுத்தியிருந்தார்கள். அப்பொழுது பன்னிருவரும் சீஷர் கூட்டத்தை வரவழைத்து, நாங்கள் தேவ வசனத்தைப் போதியாமல் பந்திவிசாரணை செய்வது தகுதியல்ல. ஆதலால் சகோதரரே, பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து. நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழுபேரை உங்களில் தெரிந்து கொள்ளுங்கள். அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம். நாங்களோ ஜெபம் பண்ணுவதிலும் தேவ வசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம் என்றார்கள் (அப் 6:2-4).

இப்போது, அப்போஸ்தலர்களுடைய யோசனை பற்றி இங்கு நாம் ஒரு சில காரியங்களைக் கவனிப்போம். பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கை எல்லாக் கிறிஸ்தவர்களும் பெற்றுக்கொள்ளலாமென்று வாதிடுவோர் உண்டு. ஆனால், அப்போஸ்தலருடைய நடபடிகள் 6ம் அதிகாரம் வரை, யாரெல்லாம் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தனரோ, அவர்கள் அனைவரும் பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கைப் பெற்றிருக்கவில்லை என்று தெளிவாகத் தெரியவருகிறது. சந்தேகமின்றி, அவர்கள் பெற்றுக்கொள்ளவில்லை என்பதற்குக் காரணம், கர்த்தருக்குக் கீழ்ப்படிந்த அனைவரும் பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கைப் பெறவேண்டுமென்பது கர்த்தரின் திட்டம் அல்ல.

பரிசுத்த ஆவியானவரால் நிறைந்துள்ள ஏழுபேரை தேர்ந்தெடுக்க வேண்டுமென அப்போஸ்தலர்கள் கேட்டுக்கொண்டதைக் கவனிக்கும் போது, அர்த்தமுள்ள ஒரு செய்தியாக அது நமக்குத் தெரிகிறது. ஏனென்றால், அற்புதங்களைச் செய்யும் வல்லமையைப் பெற்றுக் கொள்ளாமலிருக்கும் போதும் பரிசுத்த ஆவியானவரால் நிறைந்திருக்க முடியும் எனத் தெரிகிறது அல்லவா? பரிசுத்த ஆவியால் நிறைந்திருப்பதற்கும், ஒருவர் அற்புதங்களைச் செய்யும் அளவிற்கு பரிசுத்த ஆவியைப் பெற்றிருப்பதற்கும் வித்தியாசம் என்ன? ஆவியின் அளவுகள் வேறுபட்டிருந்தன என்பதே வித்தியாசம் எனத் தெளிவாகத் தெரிகிறது. அப்போஸ்தலர்கள் திருமுழுக்கு அளவிலான பரிசுத்த ஆவியைப் பெற்றிருந்தனர். எனவே, அந்நிய மொழிகளில் பேசவும், அற்புதங்கள் செய்யவும் அவர்களால் முடிந்தது. ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், இந்த சந்தர்ப்பத்தில் பரிசுத்த ஆவியால் நிறைந்திருந்த போதிலும், அவர்கள் அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:38-ல் வாக்களிக்கப்பட்டுள்ள பரிசுத்த ஆவியின் வரத்தை மட்டுமே பெற்றிருந்தனர். அது அற்புதங்கள் செய்ய முடியாத அளவிலான பரிசுத்த ஆவி.

ஆனால், இந்த சீடர்கள் எந்த அளவிலான ஆவியைப் பெற்றுக்கொள்ள இருந்தனர்? அந்த ஏழு சீடர்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர். அவர்களை அப்போஸ்தலர்களுக்கு முன்பாக நிறுத்தினார்கள். இவர்கள் ஜெபம் பண்ணி, அவர்கள் மேல் கைகளை வைத்தார்கள் (அப்.6:6) என்பதாக வசனம் கூறுகிறது. அப்படியானால், இது என்னவாயிருந்தது? இதுவே கைகளை வைத்துப் பெறும் அளவிலான பரிசுத்த ஆவி. அப்போஸ்தலர்கள் தான் அவர்கள் மேல் கைகளை வைத்தனர். எனவே, கைகளை வைத்துப் பெறும் அளவிலான பரிசுத்த ஆவியைக் கொடுக்கும் வல்லமை அப்போஸ்தலர்கள் மட்டுமே.

பெற்றிருந்தனர். இந்த அளவிலான பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்ட பின்னர் அந்த ஏழு சீடர்களும் என்னசெய்யக் கூடியவர்களாக இருந்தனர்? தொடர்ந்து நாம் படிக்கும் போது, ஸதேவான் விசுவாசத்தினாலும் வல்லமையினாலும் நிறைந்தவனாய் ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தான் (அப். 6:8) என்பதாகப் பார்க்கிறோம். மற்றவர்களுடைய காரியம் என்ன? இதுபோலவே, அவர்களும் செய்யக் கூடியவர்களாக இருந்தனர். ஆனால், அப்போஸ்தலர்கள் கைகளை வைப்பதற்கு முன்பு இப்படிப்பட்ட காரியங்களை அவர்கள் செய்ய இயலாதவர்களாக இருந்தனர்.

கைகளை வைக்கும் அளவிலான பரிசுத்த ஆவியின் வல்லமையப் பெற்றுக்கொண்ட அந்த ஏழு சீடர்களும் அற்புதங்களைச் செய்யக் கூடியவர்களாகவும், அந்நிய மொழி பேசக்கூடியவர்களாவும் இருந்தபோதிலும், அவர்களால் அந்த வல்லமையப் பிறருக்கு அளிக்க இயலவில்லை. உதாரணமாக, பிலிப்பு கிறிஸ்துவைப் போதிக்க சமாரியாவிற்குச் சென்றான். அங்கே, அநேகரிலிருந்த அசுத்த ஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களை விட்டுப் புறப்பட்டது. அநேகந் திமிர்வாதக்காரரும், சப்பாணிகளும் குணமாக்கப்பட்டார்கள். அந்தப்பட்டணத்திலே மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று (அப் 8:7-8). சமாரியர் தேவ வசனத்தை ஏற்றுக்கொண்டதை எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்டு, பேதுருவையும், யோவானையும் அவர்களிடத்திற்கு அனுப்பினார்கள். இவர்கள் வந்தபோது அவர்களில் ஒருவனும் பரிசுத்த ஆவியைப் பெறமால் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானத்தை மாத்திரம் பெற்றிருந்தவர்களாகக் கண்டு, அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும்படி அவர்களுக்காக ஜெபம்பண்ணி அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள் (அப். 8 : 14-17).

முன்பு குறிப்பிட்டது போல அப்போஸ்தலர்களால் கைகள் வைக்கப்பட்டு பரிசுத்த அவியின் வல்லமையை ஏழு பேரும் பெற்றுக் கொண்ட போதிலும் அந்தக் வல்லமையை பிறருக்கு அவர்களால் கொடுக்க முடியவில்லை. அவ்வாறு கொடுக்க முடிந்திருந்தால் அவர்கள் மற்றவர்களுக்கும் கொடுத்திருப்பார்கள். காரியங்கள் கட்டுப்பாடற்றுப் போயிருக்கும். அப்போதைய நிலைமையின்படி அப்போஸ்தலர்கள் சமாரியாவிற்குச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆனால் தேவனுக்குக் கீழ்ப்டிந்தவர்கள் அனைவரும் இந்த வல்லமையைப் பெற்றிருக்கவில்லை. உதாரணமாக, மாயவித்தைக்காரனான சீமோன் தேவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தான். அதோடு பரிசுத்த ஆவியனாவரின் வல்லமையை அடைய விரும்பினான். அதற்காக அப்போஸ்தலர்களுக்குப் பணம் கொடுக்கவும் தயாரானான். ஆனால், அவனுடைய பாவத்திற்காகஅவன் கடிந்து கொள்ளப்பட்டு பின்னர் மனந்திரும்பிய போதிலும், அவன் பேரில் அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளை வைத்து பரிசுத்த ஆவியின் வல்லமையை அவனுக்கு வழங்கவில்லை. இப்படிப்பட்ட வல்லமை ஒருவேளை அவனுக்குக் கொடுக்கப்பட்டிருந்தால் சந்தேகமின்றி அவன் அதைத் தவறாகப் பயன்படுத்தியிருக்கக்கூடும்.

எபேசு பட்டணத்திலே சீடர்களின் குழு ஒன்றுடன் பவுல் தொடர்பு கொள்ளுவதாக பின்னர் அப்போஸ்தலர் நடபடிகள் 19-ம் அதிகாரத்தில் காண்கிறோம். அவர்கள் யோவானிடம் திருமுழுக்குப் பெற்றிருந்தனர் என்றபோதும், பரிசுத்த ஆவியானவரைப் பற்றி அவர்கள் கேள்விப்பட்டிருக்கவில்லை. பவுல் அவர்களுக்கு உபதேசித்து இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே அவர்களுக்குத் திருமுழுக்குக் கொடுத்தார். அதன் பின்னர் நாம் பார்க்கிறோம். அல்லாமலும் பவுல் அவர்கள் மேல் கைகளை வைத்த போது பரிசுத்த ஆவி அவர்கள் மேல் வந்தார். அப்பொழுது அவர்கள் அந்நிய பாஷைகளைப் பேசி தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள் (அப். 19 :6).

அப்போஸ்தலர்கள் அனைவரின் மரணத்திற்குப் பின்னர் மேலும் அவர்கள் யார்மேல் எல்லாம் கைகளை வைத்தார்களோ அவர்கள் *எல்லாரும் மரணமடைந்த பின்னர் அற்புதங்கள் நடைபெற்ற காலம் முடிவுக்கு வந்துவிட்டது.* அற்புத அடையாளங்களுக்குப் பின்னர் அவசியம் இல்லாமற் போயிற்று. ஏனென்றால், இந்தக் காலத்தில் புதிய ஏற்பாடு கொடுக்கப்பட்டுவிட்டது. இப்போது நமக்கு ஒரு நல்ல வழிகாட்டி உள்ளது. ஏனெனில், நமக்கு வழிகாட்டவும், நம்மை நடத்திச் செல்லவும் புதிய ஏற்பாடு உள்ளது. இன்றைய நாட்களில் அப்போஸ்தலர்கள் கைகளை வைத்து பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்ற யாரும் இல்லறத்தாலும், அப்போஸ்தலர்கள் ஒருவரும் இல்லாததாலும் இன்று பரிசுத்த ஆவியின் திருமுழுக்குப் பெற்றவர்கள் அல்லது அப்போஸ்தலர்கள் கைகளை வைத்ததன் மூலம் அற்புதங்கள் செய்யும் வல்லமையைப் பெற்றுக் கொண்டவர்களோ யாரும் இல்லை. இதை மறுப்பவர்கள் ஆவியானவரின் வார்த்தைகளை மறுக்கிறார்கள். இது அவர்களிடம் ஆவியின் கிரியை இல்லை என்பதைத் தெளிவாக நிரூபிக்கிறது. ★

## உடன்படிக்கைப் பெட்டி வழிநடத்தும் போது மோசே....

- **பெட்டி புறப்படும்போது** கர்த்தாவே எழுந்தருளும் உம்முடைய சத்துருக்கள் சிதறடிக்கப்படுவார்களாக உம்மைப் பகைக்கிறவர்கள் உமக்கு முன்பாக ஓடிப்போவார்களாக என்றும்..
- **பெட்டி தங்கும்போது** கர்த்தாவே அநேக ஆயிரவர்களாகிய இஸ்ரவேலரிடத்தில் திரும்புவீராக என்றும் மோசே சொல்லுவான்.

# அவளோ அவர்தான் என்று உறுதியாய்ச் சாதித்தாள்

Sis. ரேச்சல் இராஜநாயகம்

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துக்களையும் ஸ்தோத்திரங்களையும் செலுத்துகிறேன்.

வேதவாக்கியங்களெல்லாம் தேவனுடைய ஆவியினாலே அருளப்பட்டிருக்கிறது என்று வாசிக்கிறோம். எனவே, அனைத்து வேத வசனங்களும் தேவனுடைய வார்த்தைதான். ஆனாலும் தேவனுடைய அநாதி திட்டத்தினாலும் அநந்த ஞானத்தினாலும் ஸ்தாபிக்கப்பட்ட சபையின் அதாவது, கிறிஸ்து பாடுபட்டு இரத்தம் சிந்தி மரித்து உயிர்த்தெழுந்து சம்பாதித்த சபையின் வரலாறு பற்றிப் பேசுகிற புத்தகம் அப்போஸ்தலர் நடபடிகள் என்பதாகும். அதிகாரத்துக்கு அதிகாரம் விசுவாசத்தையும், மனந்திரும்புதலையும், தேவ பயத்தையும் தேவனுடைய வல்லமையையும், காலங்களின் தேவனின் ஒழுங்கான திட்டத்தையும், அப்போஸ்தலர்களின் உபத்திரவாதத்தையும், வைராக்கியத்தையும், சிலுவையைப் பற்றிய உபதேசத்தையும், ஒருமனதுடன் ஏறெடுக்கப்பட்ட ஜெபங்களையும் என்று அடுக்கிக் கொண்டே போகுமளவுக்கு விசேஷித்தவைகளை உள்ளடக்கிய புத்தகம்.

பாடுகள், உபத்திரவங்களின் மத்தியிலே சபையானது மிகச் சிறந்தளவில் வளர்ந்து பெருகிற்று. 12ம் அதிகாரத்தில் முதல் முதல் அப்போஸ்தலனுடைய கொலை அங்கே நடந்தது. ஏரோது யாக்கோபை சிரச்சேதம் பண்ணினான். இந்த மகா பாதகச் செயல் யூதர்களுக்கு பிரியமாயிருந்ததினால் அவன் பேதுருவையும் சிறையிலே வைத்தான். இது யூதர்களுக்கு எப்படி பிரியமாயிருந்தது? அப்போஸ்தலர்கள் யூதமதத்தை அவர்களுடைய கொள்கைகளை தங்களுடைய புதிய உபதேசத்தினால் அழித்து விடுவார்களோ! என்று எண்ணினார். அப். 3,4 அதிகாரங்களில் நாம் இதைக் காணமுடியும்.

சரி, இது இப்படி நடந்து கொண்டிருக்கும் போது, அங்கு கூடி வந்த சபையார் இதைக் கேள்விப்பட்டு மிகவும் வேதனைப்பட்டு என்ன செய்வதென்று திகைத்தனர். பேதுருவையும் கொலை செய்து விடுவார்களோ? பஸ்கா பண்டிகை முடிந்து பேதுருவுக்கும் சிரச்சேதமோ? என்று கலங்கினர். பாடுகளுக்கு மத்தியில் சபை அபார வளர்ச்சியை சந்தித்துக் கொண்டிருந்தது. எப்படி? பார்க்கலாம் வாங்க. தேவனிடத்தில்

சொல்வதை விட வேறு வழியில்லை என்று உணர்ந்தனர். தெரியாமல் கூடி ஜெபிக்க வேண்டும்? எங்கு கூடுவது? சரி மரியாளைக் கேட்கலாம். மரியாள் சீஷர்களோடு சேர்ந்து ஜெபித்து பழக்கப்பட்டவள்(அப்.1:14). ஆகவே, தன் வீட்டை திறந்து கொடுத்தாள் மரியாள். சீஷர்கள் அங்கே கூடி பேதுருவுக்காக பாரத்தோடு ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். மரியாளின் வீட்டில் ஜெபம் ஏறெடுக்கப்பட்டுக் கொண்டேயிருக்கிறது. அங்கே தேவன் செயல்பட ஆரம்பித்து விட்டார். சிறைச்சலைக்குள் தூதனை அனுப்புகிறார். ஏரோதின் மகா கொடிய திட்டம். ஆனால் அதைவிட பன்மடங்கு வல்லமை பொருந்திய தமது செயலால் தேவன் மகிமைப்படப் போகிறார் என்பது ஏரோதுக்குத் தெரியவில்லை.

சிறையிலே நான்கு அடுக்கு பாதுகாப்பு. வகுப்புக்கு 4 பேர் என்று 4 வகுப்பு. ஆக, 16 பேர் பேதுருவை காவல் செய்கின்றனர். சங்கிலியினால் கட்டப்பட்டிருக்கையில் நடு இரவில் மரியாளின் வீட்டில் ஜெபம் ஓயாமல் போய்க் கொண்டிருக்கிறது. பேதுரு சிறையிலே நிம்மதியாய் தூங்கிக் கொண்டிருக்கிறார். தூதன் வந்து எழுப்பி அரையை கட்டச் சொல்லி தன் பின்னே வரச் சொல்கிறான். இரும்புக் கதவுகள் தானாக திறக்கின்றன. வெளியே வீதியிலே பாதி வழியில் தூதன் காணாமல் போய் விடவே பேதுரு தரிசனங் காண்கிறதாக நினைத்து பிறகு தெளிவு பெற்று நடக்கிறான். பேதுருவுக்கு ஞானதிருஷ்டியடைகிறதும் தரிசனங் காண்கிறதும் பழகிப் போய் விட்டது. 10 ம் அதிகாரத்திலும் இதேமாதிரி தரிசனம்தான். தேவன் தன் திட்டங்களை அப்போஸ்தலர்களுக்கு இப்படியாக வெளிப்படுத்துகிறார். அன்பான தேவனின் செயல்பாடுகளை வியந்து வியந்து நம் காலத்தை நாம் கழிக்க வேண்டியதுதான். ஆனால், இன்றைக்கு தரிசனம், சொப்பனம் வெளிப்படு என்று எதுவுமே இல்லை.

இருக்கிறது என்று சொன்னால் நம்பாதீர்கள்.ஏமாந்து போகாதீர்கள். தேவன் இன்று யாரோடும் பேசுவது இல்லை. எழுதப்பட்ட முழு வேதகாமம் என்றைக்கு நம் கரங்களில் வந்ததோ அன்றே வெளிப்பாடுகள் நின்று போயிற்று. எல்லா காலங்களுக்கும் சொல்லப் போனால், இயேசு பூமியை நியாயந்தீர்க்க நடுவானத்தில் வரும்வரை அல்லது நாம் மரிக்கும் வரை நமக்கு என்ன உதவிகள் ஆலோசனைகள் தேவையோ

அத்தனையும் நம்மை அளவுக்கதிகமாய் நேசிக்கும் நம் தேவன் பரிசுத்தாவியைக் கொண்டு நமக்கு எழுதிக் கொடுத்துவிட்டார். எனவே, வேறொரு சத்தியம் இல்லை. எதிர்பார்த்து ஏமாற வேண்டாம்.

சரி, இங்கே மரியாள் வீட்டிற்குச் செல்லலாம். யார் இந்த மரியாள்? வசனம் சொல்கிறது யோவான் என்னும் மறுபேர் கொண்ட மாற்குவின் தாய் என்று(அப்.12:25). அதாவது யோவான் மாற்கு. இவன் பர்னபாவுக்கு உறவுக் காரன். இவன் அப்போஸ்தலன் அல்ல. ஆனால் அப்போஸ்தலர் நடபடிகளில் இடம் பெறும்

தகுதியைப் பெற்றுவிட்டான். நான்கு சுவிசேஷங்களில் மாற்கு என்ற நற்செய்தி நூலின் ஆசிரியர் இவர்தான். பேதுருவால் ஞானஸ்நானம் பெற்றவன்(1பேதுரு 5:13). ஆரம்பத்திலே கொஞ்சம் ஆவிக்குரிய காரியங்களிலே பலவீனமாயிருந்தாலும் பிற்பாடு பவுலோடும் பர்னபாவோடும் சுவிசேஷப் பயணத்தில் பயணம் செய்யுமளவுக்கு தன் தகுதியை வளர்த்துக் கொண்டான். இதெல்லாம் எப்படி நடந்தது? யார் காரணம்? அவன் தாய் மரியாள் தான். உபத்திரவங்களும், பாடுகளும் கிறிஸ்தவர்களுக்கும், சபைக்கும் எதிராக வந்து உயிருக்கு உத்தரவாதம் இல்லாத ஆபத்தான காலக்கட்டத்தில் தன் மகனை சுவிசேஷ பயணம் செய்யுபடியாக பவுலோடும் பர்னபாலோடும் அனுப்பிவைத்த தாய் இந்த மரியாள்.

மரியாள் தன் வீட்டை ஜெபத்திற்காக திறந்து கொடுத்தாள். தன் பிள்ளையாகிய யோவான் மாற்குவை ஊழியத்திற்காக அனுப்பிக் கொடுத்தாள். தீங்கநுபவிக்க வேண்டும். உயிருக்கு ஆபத்து வரும் என்ற நிலை இருந்தபோதும் அவள் யோசிக்காமல் தன் மகனை அனுப்பிவைத்து, தேவன் இயேசு கிறிஸ்துமேல் வைத்திருந்த அன்பையும் விசுவாசத்தையும் தான் காட்டுகிறது. எனவேதான், யாக்கோபுவின் மரணம் தொடர்ந்து பேதுருவின் சிறையடைப்பு வந்தபோது இதற்கு ஒரே வழி ஜெபம் தான் என்று தீர்மானித்து சபையாரை வரவழைத்து ஒருமனதோடு ஜெபிக்க ஏற்பாடு செய்தாள். ஜெபத்தின் மேன்மையை நாம் பலமுறை மறந்து பிசாசுக்குக் கீழ்ப்படிந்து தேவன் செயல்பட அனுமதி கொடுக்காமலே நாம் வாழ்ந்து விடுகிறோம். அப்போஸ்தலர் 1:14-ல் சீஷர் களோடு சேர்ந்து ஜெபித்த ஸ்தீரிகளுள் இந்த மரியாளும் இருந்திருக்க வாய்ப்புண்டு. மேலும் அப். 6:4;12:5 ஆகிய பகுதிகளிலும் ஏறெடுக்கப்பட்ட ஜெபங்களின் தன்மையை நாம் பார்க்க முடியும். கிறிஸ்தவர்கள் எங்கெல்லாம் கூடிவருகிறோமோ விசேஷமாக படிப்பு சம்பந்தமான காரியங்கள், வேலை, வசதி போன்ற தேவைகளுக்காக ஜெபிக்க வேண்டும் என்று இயற்கையாகவே எண்ணம் வரவேண்டும்.

பிள்ளை வளர்ப்பிலே தோற்றுப்போய் தவிக்கும் இந்த உலகிற்கு, சமுதயத்திற்கு மரியாள் ஓர் நல்ல முன்மாதிரி, நல்ல சவகாசத்தை தன் மகனுக்கு ஏற்படுத்திக் கொடுத்தாள். பிள்ளைகளின் படிப்பு எதிர்காலம் அவர்களுடைய வாழ்க்கைப் பயணம் எதுவும் நமக்குத் தெரியாதிருந்தாலும் அவர்கள் எதைச் செய்தாலும் வாழ்க்கை, வேலை, அவர்களுடைய பேச்சு மூச்சு எல்லாவற்றிலும் கிறிஸ்தவனாக இருக்க வேண்டும். தேவனை நேசித்து அவருக்காக சேவை செய்ய வேண்டும். அதைத்தான் மரியாள் யோவான் மாற்குவிடம் எதிர்பார்த்தாள்.

பின்பு நம் தலைப்பில் பார்க்கும் ரோதையின் உறுதிப்பாடு, ஜெபத்தின் வல்லமையை வெளிப்படுகிறது. பேதுரு சிறையிலிருந்து நேரே மரியாள் வீட்டிற்கு வருகிறாள். என்ன ஒரு அபார நம்பிக்கை இந்த ஊழியனுக்கு. மரியாள் வீட்டில் எல்லாரும் தனக்காக ஜெபிப்பார்கள் என்று நம்பி வருகிறான். கதவைத் தட்டுகிறான். நடு இரவு. ரோதை என்ற பெண் ஓடிவந்து இது பேதுருவின் சத்தம்தான், பேதுரு வெளியே நிற்கிறார் என்கிறாள். மற்றவர்களோ நீ பிதற்றுகிறாய். ஒருவேளை அவனுடைய தூதனாயிருக்கலாம் என்கிறார்கள். பல வேளைகளிலே நாமும் இதே நிலையில்தான் இருக்கிறோம். ஜெபிக்கிறோம். விசேஷித்த ஜெபம், ஒருமனப்பட்டு ஜெபம், கண்விழித்து ஜெபம், என்றெல்லாம் செய்கிறோம் ஆயினும், விசுவாசமில்லாமல் தேவனுடைய வல்லமையைக் குறைத்து மதிப்பிட்டே பழகிப் போய் விட்டோம்.

ஆனால், ரோதை ஓர் இளம்பெண். வேலைக்காரப்பெண் என்றும் சொல்லப்படுகிறது. இவள் சற்றும் பயமில்லாமல் சந்தேகமில்லாமல்அவர்தான் என்று பார்க்காமலேயே உறுதியாய் சாதித்தாள். பேதுருவின் சத்ததை அவள் அறிந்து வைத்திருந்தாள். சந்தோஷமான செய்தியை அவளாள் அடக்கி வைக்க முடியவில்லை. உடனே செயல்பட்டு விடுகிறாள்.

இயேசுவைப் பற்றியும் தன் இரத்தம் சிந்தி சம்பாதித்த சபையைப் பற்றியும் இரட்சிப்பு பற்றியும் நாம் பிறரோடு இப்படி ஆர்வமாகப் பகிர்ந்து கொள்கிறோமா?ரோதையைப் போன்ற இளம்பெண்களை சுவிஷேத்தை பிறரோடு பகிர்ந்துகொள்ள நாம் உற்சாகப்படுத்த வேண்டும். ரோதையின் இப்பேர்பட்ட செயல்பாட்டிற்கு களம் ஏற்படுத்திக் கொடுத்தது மரியாள்தான்.

சரி, ரோதையின் மற்றுமோர் குணாதிசயம் தனக்குத் தெரிந்த உண்மையில் உறுதியாய் நின்றாள். மற்றவர்கள் பிதற்றுகிறாய் என்றபோது ஒருவேளை, பெரியவர்கள் சொல்லுகிறது சரியாகத்தான் இருக்குமோ? அவர்களை எப்படி பகைத்துக் கொள்வது என்று சலனபடாமல் உண்மையில், உறுதியாய் நின்றாள். உணர்வு, அறிவு இவைகளுக்கு அவள் இடம் கொடுக்கவில்லை. சத்தியத்தின் உண்மையை நாம் தெரிந்து கொண்ட பிறகு யாரும் அதைக் கலைத்துப்போட நாம் அனுமதிக்கவே கூடாது.

வேதத்தையும் கிறிஸ்தவத்தையும் உலகம் தொடர்ந்து தாக்கிக் கொண்டேதான் இருக்கிறது. பிசாசு தொடர்ந்து பொய் தோற்றத்தைக்காட்டி எல்லோரும் செய்கிறார்கள் நீ ஏன் செய்யவில்லையென்று நம்மை அழிக்கவே துடிக்கிறான். ஆனால் நாமோ இந்த வருட இறுதியில் நாம் ரோதையைப் போன்று சத்தியத்தில் உறுதியாய் நிற்போம். ஆமென். ★

# அந்நிய தேசத்தில் தேவனோடு அந்நியோந்நியமாய்

சகோ. பென்னி மார்ட்டீன்

**வ**ருடத்தில் ஒரு முறை வரும் வசந்தகாலம் போல் வாழ்க்கையில் ஒரு முறை வரும் வாலிபப் பருவத்தில் இருக்கும் வாலிபர்களுக்கு வானவராம் இயேசு கிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தில் வாழ்த்துக்கள். உங்கள் யாவரையும் மாதந்தோறும் மறக்காமல் சந்திப்பது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கிறது. பிரியமானவர்களே! வேதபுத்தகத்தில் இடம் பெற்றிருக்கும் சில கதாப்பாத்திரங்களைப் பார்க்கும்போது நாம் அவர்களைப் பின்பற்றுவதற்குத் தகுதியானவர்களாக இருப்பதைக் காண முடியும். அப்படி ஓர் ஆச்சரியமான கதாப்பாத்திரம் தான் இந்த தானியேல். பொதுவாக, இவ்வுலகில் ஒருவர் ஒரு துறையில் வெற்றிபெற வேண்டுமானால், அவர் சில காரியங்களில் சமரசம் செய்து கொள்ள வேண்டியதாயிருக்கிறது. ஆனால், தானியேல் தன் வாலிபப்பிராயத்தில் கூட தேவனுடைய காரியங்களை உலகக் காரியங்களோடு சமரசம் செய்து கொள்ளாமலே வாழ்வில் புதிய உயரங்களைத் தொட்டார். இந்த தானியேல் அந்நிய தேசத்தில் அடிமையாக இருந்தபோதிலும் ராஜகட்டளையை விட தேவகட்டளையே மேலானது என்றெண்ணி அதற்கே கீழ்ப்படிந்தார். அன்று அவர் விளைவுகளைப் பற்றி கவலைப்படவில்லை. ஆனால், இன்று வாலிபர்கள் வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்காக அரசின் சலுகைகளை பெறுவதற்காக உலகத்திற்கு ஒத்த வேஷம் போடுவதை நாம் பார்க்கிறோம்.தானியேல் பாபிலோன் சாம்ராஜ்யத்தில் ஓர் அடிமையாக இருந்தபோதிலும் தேவனுக்கு விரோதமான செயலில் ஈடுபட கட்டளை வந்ததும் அது அவரை அனுஅளவும் அசைக்கவில்லை. உயிருக்கு உலை வைக்கும் உத்தரவு ராஜாவிடமிருந்து பிறப்பிக்கப்பட்டபோதிலும் அதைத் துச்சமாக எண்ணி தேவனுக்காக நின்றார். தானியேல் பாபிலோன் தேசத்தில் உயர்ந்த பதவியை அடைவதற்கு அவரிடத்திலிருந்த எந்த குணாதிசயங்கள் காரணமாக அமைந்தன என்று இப்போது நாம் பார்ப்போம்.

**1. அவர் தீர்மானமுடையவராக இருந்தார்.**

தானியேல் வாலிபப்பருவத்தில் நேபுகாத்நேச்சரால் பாபிலோனுக்கு கொண்டு போகப்பட்டார். அந்த அந்நிய தேசத்திற்குப் போனவுடனையே தன்னைத் தீட்டுப்படுத்தக்கூடிய ராஜாவின் போஜனத்தைப் புசிக்கவும் அவருடைய திராட்ச ரசத்தைக் குடிக்கும் சவாலை எதிர்கொள்ளவும் வேண்டியதாயிருந்த இந்த சரித்திரக்காட்சி நம் மனக்கண்ணில் தோன்றும்போது ராஜபோஜனத்தை ருசிபார்க்கும்

வாய்ப்பை நழுவ விட்டுவிட்டாரே இவர் பிழைக்கத் தெரியாதவர் என்று சில வாலிபர்கள் நினைக்கக்கூடும். ஆனால் ராஜபோஜனம் தன்னை தீட்டுப்படுத்தும் என்று தானியேல், தன் மனதில் தீர்மானித்திருந்தபடியால் அதைப் புசிக்கவில்லை. தானியேல் ராஜாவின் போஜனத்தைப் புசிக்க வேண்டும் என்கிற கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் இருப்பதினால் ஏற்படும் விளைவுகளைப் பற்றி கவலைப்படாமல் ராஜாதி ராஜாவாகிய தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியும்படி தீர்மானித்தார். இன்று வாலிபர்கள், தேவனுக்கா உலகத்திற்கா? என்று முடிவெடுக்கும் விஷயத்தில் முடிவெடுக்கத் திணறுவதை நாம் பார்க்க முடியும். இங்கே தானியேல் தேவனுக்கு முதலிடம் கொடுத்தபடியால், தேவன் தானியேலுக்குப் பிரதானிகளின் தலைவனிடத்தில் தயவும் இரக்கமும் கிடைக்கும் படி செய்தார் (தானியேல்19). நாம் உலகப் பிரகாரமான காரியங்களை துரிதமாகத் தீர்மானிக்கிறோம். ஆனால், தேவனுக்கடுத்த காரியங்கள் என்று வரும்போது தீர்மானிக்கத் தடுமாறுகிறோம். விளைவுகள் அப்படியிருக்குமோ? இப்படி இருக்குமோ? என்று கேள்விக்கணைகளைத் தொடுக்கிறோம். ஆனால், ஒரு கிறிஸ்தவன் எப்படிப்பட்ட தீர்மானத்தை எடுக்க வேண்டும்? நம் அருமை இரட்சகராகிய இயேசு கிறிஸ்து இதை மத்தேயு 6:33 ல் தெளிவு படுத்திவிட்டார். நாம் முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடும்போது அதாவது பின் விளைவுகளைப்பற்றி, கவலைப்படாமல் தேவ சித்தத்தை நாம் நாடுகிறவர்களாக, அதை நிறைவேற்றுபவர்களாக இருக்கும்போது நம் சத்துருக்களும் நம்மோடு சமாதானமாகும்படி செய்வார் (நீதி 16:7). பிரியமானவர்களே! தேவன் நம்மை இவ்வுலகில் வாழ அனுமதிக்கும் கடைசி நிமிடம் வரை தேவனுக்காக மரிக்கவும் தீர்மானிப்போம்.

**2. அவர் கொள்கையுடையவராக இருந்தார்.**

இன்று பல அரசியல்வாதிகளை எடுத்துக்கொண்டால் அவர்கள் தங்களுக்கென்று சில கொள்கைகளை வகுத்துக்கொண்டு அக்கொள்கைகைகளைப் பரப்புவதிலும், அவைகளுக்காக நிற்பதிலும் பிடிப்புள்ளவர்களாக இருப்பதை நாம் காணமுடியும். கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாகிய நாமும் தேவனுடைய கொள்கைகளை அதாவது உபதேசங்களைப் பரப்புவதிலும், அவைகளுக்காக நிற்பதிலும் பிடிப்புள்ளவர்களாக இருக்க வேண்டும். தானியேல் தன்னுடைய உறுதிப்பாட்டில் எந்த சமரசமும் செய்து கொள்ளவில்லை. ஒரு வாலிபனாக ராஜாவின் போஜனத்தை புசிக்க மறுப்பதிலும் சரி முதிர்வயதில் பெல்ஷாத்சாரின் வெகுமதிகளை வாங்க மறுப்பதிலும் சரி தன் கொள்கையில் தன் நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தார். (தானியேல் 1:8;5 : 13 17). பொதுவாக மக்கள், கொள்கையில் பிடிப்புள்ளவர்களை நம்பி தங்கள் பணிகளை ஒப்படைப்பார்கள். காரணம் அவர்கள் அப்பணியில் உறுதியாயிருந்து அதைச்செய்து முடிப்பதுதான். தேவனும் தங்கள் கொள்கையிலும் வார்த்தையிலும் உறுதியாயிருந்து அவருக்காக நிற்கிறவர்களை மெச்சுகிறார் (சங்கீதம் 15 : 15). பெரும்பாலான வாலிபர்கள் தேவகாரியங்களில் ஈடுபட ஆரம்பத்தில் ஆர்வமாகக் களமிறங்குகிறார்கள். ஆனால், உலகத்தின் ஐசுவரியம் புகழ் போன்றவைகள் அவர்களுடைய

கண்களை மறைத்துவிடுகிறபடியால், தேவ காரியங்களில் ஆர்வம் குறைந்துவிடுகிறது. ஒருவர் தன்னுடைய சொந்த நாட்டில் சுதந்திரமாக இருக்க முடியும். ஆனால் அந்நிய நாட்டிற்குப் போகும்போது அங்குள்ள சட்டத்திட்டங்களுக்குக் கீழ்ப்படிந்தே ஆக வேண்டும். இல்லையென்றால் தண்டனைக்குத் தப்ப முடியாது. இங்கே தானியேல் அந்நிய தேசமாகிய பாபிலோனில் இருந்துகொண்டு ராஜகட்டளைக்குக் கீழ்ப்படியாமல் தேவகட்டளைக்குக் கீழ்ப்படிந்தது அவர் தன் கொள்கையில் எவ்வளவு பிடிப்புடையவராக இருந்திருக்கிறார் என்பதைத்தான் காட்டுகிறது.

**3. அவர் பரிசுத்தமுடையவராக இருந்தார்**

தானியேல் தீர்மானமுடையவராக, கொள்கையுடையவராக வாழ்க்கையில் இருந்தார் என்று நாம் பார்க்கிறோம். ஆனால் எல்லாவற்றையும் விட தானியேல் பரிசுத்தமாக இருந்தார். அதன் காரணமாக தேவன் அவரை அந்த அளவுக்கு உயர்த்தினார். தானியேலின் பரிசுத்த வாழ்க்கை பற்றிப் பார்க்கும்போது அவருடைய சத்துருக்கள் கூட அவரிடத்தில் குற்றம் கண்டுபிடிக்க முடியவில்லை (தானியெல் 6 : 14). பொதுவாக, வாலிபர்கள் மத்தியில் ஒரு தவறான, அதே நேரத்தில் ஓர் அபாயகரமான எண்ணம் காணப்படுகிறது. அதென்னவெனில், வாலிபப்பருவத்தில் பரிசுத்தம், பத்தியம் என்றெல்லாம் இருக்கவேண்டியதில்லை, அதையெல்லாம் ஆண்டு அனுபவித்தபிறகு பாத்துக்கொள்ளாலாம் என்று நினைக்கிறார்கள். பிரிமானவர்களே! வாலிப வயதில் நாம் பரிசுத்தத்தைக் காத்துக்கொள்ள வேண்டுமென்று தேவனால் எதிர்பார்க்கப்படுகிறோம் (தீமோத் 4:13). அது மாத்திரமல்ல தானியேல் தனிப்பட்ட வாழ்க்கையில் தினமும் மூன்று முறை ஜெபிக்கிறவராகவும் இருந்திருக்கிறார் (தானியேல்6:10). அருமையானவர்களே! தேவன் தானியேலை உயர்த்தியதற்கு எவைகளெல்லாம் காரணங்களாக இருந்தன என்று நாம் இதுகாறும் பார்த்தோம். அவைகளை நம் வாழ்விலும் நடைமுறைப்படுத்தினால் தேவனிடமிருந்து அபரிதமான ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக்கொள்ள முடியும். தேவன் தாமே உங்கள் யாவரையும் ஆசீர்வதிப்பாராக ஆமென். ★

**ஆசாரியனுக்கான மூன்று ஆசீர்வாதங்கள்**

- கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து உன்னைக் காக்கக்கடவர்
- கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரகாசிக்க பண்ணி உன்மேல் கிருபையாயிருக்கப்படவர்
- கர்த்தர் தம்முடைய முகத்தை என்மேல் பிரசன்னமாக்கி உனக்குச் சமாதனம் கட்டளையிடக்கடவர்

சிறுவர் பகுதி

# நினைவு கூருவோம்

Bro. ஏபில் நாயகம்

எனக்குப் பிரியமான பிள்ளைகளே! உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசுவின் இன்ப நாமத்தில் வாழ்த்துக்கள். அனைவரும் சுகமாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கிறீர்களா? அரையாண்டு தேர்வு முடிந்து விடுமுறையில் குதூகலமாக இருப்பீர்கள் என நம்புகிறேன். இந்த ஆண்டின் இறுதிக்கு வந்திருக்கிறோம் அப்படித்தானே? ஒவ்வொரு ஆண்டின் இறுதியும் எனக்கு மிகவும் பிடித்தமான ஒன்று. ஏன் அப்படி என்று யோசிக்கிறீர்களா? விடுமுறை காலம், புத்தாடைகள், புது வருடம் என்று பல காரணங்கள் இருந்தாலும் வேறொரு காரணத்திற்காக நான் ஆண்டின் கடைசி மாதத்தை விரும்புவேன். அது எதினால் என்பதைத்தான் உங்களோடு பகிர்ந்து கொள்ள இருக்கிறேன்.

நம் பரலோக தேவனுக்கு, பூமியில் வாழ்கின்ற நம்மிடத்திலே சில எதிர்பார்ப்புகள் இருக்கிறது. தேவனாகிய தம்மை மனிதர்கள் தேடவேண்டும், தமக்குக் கீழ்படிய வேண்டும். தமக்குப் பிரியமாக வாழவேண்டும் என்று பல கரியங்களை எதிர்பார்க்கிறார். அதைப்போலவே, தேவனாகிய அவரிடம் இருந்து பெற்ற நன்மைகளை மனிதன் மறந்துவிடாமல் அவற்றை நினைவு கூர வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறார்.

பழைய ஏற்பாட்டிலே எகிப்திலிருந்து விடுதலையாகி வந்த இஸ்ரவேல் மக்களிடம் கட்டளைகளைக் கொடுக்கும்பொழுது தேவனாகிய அவரிடமிருந்து பெற்றுக்கொண்ட நன்மைகளை மறவாமல் இருக்கும்படி எச்சரிக்கையாய் இருக்கவேண்டும் என்று மோசேயின்மூலம் தேவன் கட்டளை கொடுத்தார். உபாகமம் 8:10-18 வசனங்களில் தேவன் செய்த நன்மைகளை மோசேயின் மூலம் பட்டியலிட்டுக் காட்டி அதை அவர்கள் மறவாமல் இருக்க வேண்டும் என்று எதிர்பார்த்தார்.

பிள்ளைகளே, இஸ்ரவேல் ஜனங்கள் தாங்கள் கடந்து வந்த பாதையை நினைத்துப் பார்க்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்த்தது போல நம்மிடமும் ஒன்றை எதிர்பார்க்கிறார் அது என்ன?

இந்த வருடம் முழுவதையும் நாம் திரும்பிப் பார்க்கவேண்டும். வருடத்தின் முதல் நாளிலிருந்து தேவன் நமக்கு செய்த பலவிதமான நன்மைகளை நாம் பட்டியலிட்டு அதற்காக நன்றிகளைச் செலுத்தவேண்டும். நமக்குக் கிடைத்த உணவு, உடை, வீடு, பெற்றோர், ஆரோக்கியம், சபை, ஊழியர், சொந்தங்கள், நண்பர்கள், பள்ளி ஆசிரியர்கள் புதிய பொருட்கள் என பல நன்மையான காரியங்கள் தேவனால் நம் ஒவ்வொருக்கும் கொடுக்கப்பட்டது. இவை அனைத்தையும் ஒவ்வொன்றாக நினைவுகூர்ந்து ஒவ்வொரு நன்மையான காரியங்களுக்கும் நாம் நன்றி செலுத்தவேண்டும். சிறு பிள்ளைகளாகிய நீங்கள் அப்படி செய்யும் பொழுது அவர் உங்களில் நிச்சயம் அதிகமாக அன்பு காட்டுவார். இன்னும் நன்மையான காரியங்களை உங்களுக்கு கட்டளையிடுவார். செய்வீர்களா? ★

# வேத வினா போட்டி

பதிலளிப்போர் கவனத்திற்கு

**கீழ்க்கண்ட கேள்விகளுக்கு வேதவசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் அடுத்த மாதம் 10 ம் தேதிக்குள் திருமறை ஆசான் முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் அலைபேசி எண்ணையும் தவறாமல் எழுதி அனுப்பவும். (இதற்கான விடை ஜனவரி மாத இதழில்)**

1. இஸ்ரவேலில் யுத்தத்திற்கு எண்ணப்பட்டவர்கள் எத்தனை பேர்?
2. எந்தக் கோத்திரம் யுத்ததிற்கு எண்ணப்படவில்லை?
3. ஆசரிப்புக்கூடார சேனையில் வேலை செய்ய வயது வரம்பு என்ன?
4. இஸ்ரவேலரின் விசேஷித்த பொருத்தனை என்ன?
5. பகலிலும் இரவிலும் வாசஸ்தலத்தை மூடிக்கொண்டிருந்தது எது?
6. யாரிடம் கண்களைப்போல என்று மோசே சொன்னார்?
7. கர்த்தருடைய அக்கினி எங்கு பற்றியெரிந்தது?
8. கொத்துமல்லி அளவும், நிறம் முத்துப்போலவும் இருந்தது என்ன?
9. பாளையத்திலே தீர்க்கதரிசனம் சொன்ன இருவர் யார்?
10. யாரைக் குணமாக்க வேண்டுமென்று மோசே கெஞ்சினான்?

(லேவியராகமத்தில் தேடிக் கண்டுபிடியுங்கள்!)

## நவம்பர் மாத வினாக்களுக்கான விடைகள்

1. இரத்தம் (17:11)
2. தனக்கும் ஜனங்களுக்கும் (9:7)
3. அன்புகூர வேண்டும் (19:18)
4. பரிசுத்தக்குலைச்சல் (22:16)
5. எளியவனுக்கும் பரதேசிக்கும் விட்டுவிட (23:22)
6. செலோமித் (24:11)
7. யூபிலி வருஷம் (25:10)
8. அப்பம் என்னும் ஆதரவு கோல் (26:26)
9. சீனாய் மலையில் (26:46)
10. உடன்படிக்கை (26:42)

## சரியான பதில் எழுதியவர்களில் சிலர்

1. M. செல்வம் - வெள்ளலூர்
2. S. ஜெயராஜ் - பொள்ளாச்சி
3. J. மாலதி ஜெயக்குமார் - மூலனூர்
4. ர. அபினேஷ் - மூலனூர்
5. ரூபவல்யா - தூத்துக்குடி
6. V. C. ஷைலா அலெக்ஸ் - கன்னியாகுமரி
7. N. இந்திரா ஜெபக்கனி - நாசரேத்
8. S. சாந்த குமாரி - நாசரேத்
9. N. ஜெபத்தாய் - நாசரேத்
10. J. ஜெமீலா செல்லையா - நெல்லை
11. ஜெயமணி ஜெயபாண்டியன் - கடலூர்
12. M. சிப்போரா - திருச்சி
13. V.S.S பால் ராஜ் - மதுரை
14. செல்வமணி குணசேகரன் - சென்னை
15. A. வின்செண்ட் - திருச்சி
16. குழந்தையம்மாள் - கடலூர்
17. C. அருள் ராஜ் - சென்னை
18. G. விஜயா - கோபி
19. G. சாமுவேல் மோகன்தாஸ் - சென்னை
20. ஜெயசிங் - சென்னை
21. நிறைமதி விஜயராஜன் - சென்னை
22. ஈஸ்வரி இமானுவேல் - பவானி
23. புஷ்பம் முத்துமாணிக்கம் - ஈரோடு
24. அசோக் - பொம்மியம்பட்டி
25. ரம்யா - பொம்மியம்பட்டி
26. இளவரசி - பொம்மியம்பட்டி
27. முத்துச்சாமி - பொம்மியம்பட்டி

# வேதாகம கேள்வி - பதில்

**கேள்வி :** **ஆதியாகமம் 1-ம் அதிகாரத்தில் வரும் நாட்கள் இருபத்தி நான்கு மணிநேர கால அளவைக் கொண்டதா?**

**பதில் :** ஆம். ஆனால், பரிணாமக் கொள்கைக்காரர்கள் இவ்வதிகாரத்தில் இடம்பெற்றுள்ள நாட்கள் 24 மணிநேர கால அளவைக் கொண்டதல்ல என்று வாதிடுகிறார்கள். அதற்காக அவர்கள், 2 பேதுரு 3:8- ல் *கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம் போலவும் ஆயிரம் வருஷம் ஒருநாள் போலவும் இருக்கிறதென்பதை* சொல்லர்த்த ரீதியாகச் சுட்டிக்கட்டுகிறார்கள். அதாவது, ஒவ்வொரு சிருஷ்டிப்பிற்கும் இடையில் ஆயிரம் வருடம் உள்ளது என்று வாதிடுகின்றனர். ஆனால், வேதம் அவ்வாறு குறிப்பிடுவதில்லை என்பதை நாம் முதலில் புரிந்து கொள்ளவேண்டும்.

யாத். 20:8,11-ம் வசனங்களில் ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக; ஆறுநாளும் நீ வேலை செய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருக்கு ஓய்வுநாள்.... கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார் என்று தெளிவாகக் கூறப்பட்டிருப்பதை நாம் உற்று நோக்கவேண்டும். பரிணாமக்கொள்கைக்காரர்கள் கூருவது போல், *ஒவ்வொரு சிருஷ்டிப்பிற்கும் இடையில் ஆயிரம் வருஷம் என்றால், இஸ்ரவேலரின் ஓய்வுநாள் ஆசாரிப்பு குறித்து சற்று நிதனித்துப் பாருங்கள்! வேதம் சொல்கிறது மனிதனுக்கு பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷம் என்று* (சங்கீதம் 90:10).

மேலும், ஆதியாகமம் 1-ம் அதிகாரத்தில் சாயங்காலமும் விடியற்காலமுமாகி முதலாம் நாள், இரண்டாம்நாள், மூன்றாம் நாள் என்றுதான் குறிப்பிட்டுள்ளார். தேவ ஆவியினால் ஏவப்பட்ட தாசன் மோசே இதைத் திரும்ப திரும்ப எழுதி சிருஷ்பின் உண்மையை நிலைநாட்டியிருக்கிறார். எனவே, *சாயங்காலமும், விடியற்காலமுமாகி என்பது 24 மணிநேர கால அளவை உள்ளடக்கிய நாட்கள்* தான் என்பதை நாம் உறுதியாக நம்புவதற்கு ஏதுவாகவே வேதவசனங்களின் கூற்று இருக்கிறது. எனவே, எப்படிப்பட்ட கால அளவிலும் இப்பிரபஞ்சத்தை அவரால் உருவாக்க முடியும். அவர் மனித வாழ்விற்கு மாறான, விநோதமான செயலாக இவ்வுலகை உண்டாக்காமல் அவர்களின் அன்றாட நிகழ்வுகளுக்கு ஏற்றார் போலவே உண்டாக்கியிருக்கிறார். இதினிமித்தம் நாம் பரிணாமக் கொள்கைக்காரர்களைப் போலல்லாமல், சிருஷ்டிப்பு 24 மணிநேர கால அளவை உண்டாக்கியதுதான் என்பதால் வேதத்தை உறுதியாக நம்புவோம்.

★

# கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார்
# சங்115:12

Bro.K.M. பிலிப்

**தே**வன் உலகில் அநேக அதிசயிக்கத்தக்க பிரம்மாண்டங்களைப் படைத்திருக்கிறார். சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், கடல், காற்று, உயர்ந்து நிற்கும் மாமலைகள் இன்னும் பல நம்மை பிரமிக்வைக்கிறது. அவைகளின் தோற்றங்களும் மாபெரும் செயல்களும் எனறும் அப்படியே நிலைத்து நிற்கின்ற பாங்கும் பிரமிப்பூட்டுகின்றன. இத்தகு பிரம்மாண்டமான படைப்புகளோடு மனிதர்களாகிய நம்மை ஒப்பிடும்போது நாம் எம்மாத்திரம். நம்முடைய ஆயுள் நாட்கள் 70 வருடங்கள் பெலத்தின் மிகுதியால் 80 வருடங்கள் வாழ்ந்து இல்லாமல் போகிறோம் . இப்படி அற்ப ஆயுள் உள்ள மனிதனைக் குறித்து வேதம் சொல்லுகிற மிகப் பெரிய உண்மை மிகவும் பிரமிக்க வைக்கிறது. அதுதான் *கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார்* என்பது எவ்வளவு மாபெரும் ஆச்சிரியம். இதைத் தான் தாவீது *என் உட்காருதலையும் என் எழுந்திருக்குதலையும் நீர் அறிந்திருக்கிறீர். என் நினைவுகளை தூரத்திலிருந்து அறிகிறீர் நான் நடந்தாலும் படுத்திருந்தாலும் என்னைச் சூழ்ந்திருக்கிறீர். என் கருவை உம்முடைய கண்கள் கண்டது* (சங். 139:2,3,16) என்றும் கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார் (சங்138:8) என்றும் தன் வாழ்க்கையில் அநுபவித்து எழுதியுள்ளார்.

இந்த அநுபவங்கள் நம் வாழ்க்கையில் இல்லாததால்தான் நமக்கு ஏற்படும் சோதனைகள் வேதனைகள் போராட்டங்கள் ஏமாற்றங்கள் தோல்விகளில் துவண்டு போய் கிதியோன் போல கர்த்தர் எங்களோடிருந்தால் இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன்? (நியா.6:13) என்று புலம்புகிறோம். இதற்குக்காரணம் உயிருள்ள மனுஷன் முறையிடு வானேன்? அவன் தன் பாவத்துக்கு வரும் தண்டனையைக் குறித்து முறையிடுவதென்ன? (புல.3:39) என்பதையும், அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள் என்கிற தேவனுடைய அனுமதியையும் சரியாய்ப் புரிந்து கொள்ளாததேயாகும் அதேசமயம் தேவனை சரியாய்ப் புரிந்து கொண்ட ஆபிரகாம், யோசேப்பு, யோபு போன்ற நீதிமான்கள் புலம்புவதில்லை. இதைத்தான் தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் பெருகும் என்று (11பே1:2) பேதுரு வலியுறுத்துகிறார்.

ஆம், நம்முடைய தேவன் நம்மைக் காண்கிறவர் (2நாளா. 16:9). அவர் நம்மை விசாரிக்கிறார் (1பேதுரு 5:7) நமக்கு சகாயர் (சங்.54:4), நமது பரிகாரி (யாத்15:26), நம்மை விடுவிப்பவர் (சங்.46:1) நமக்காக யாவற்றையும் செய்து முடிப்பவர் (சங்.57:2). இதற்காகவே தேவன் நம்மை நினைத்திருக்கிறார் என்ற அறிவு நமக்குள் இருக்க வேண்டும்.

அன்பர்களே, கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார் என்ற தேவவாக்கைத் தனது அனுபவமாக்கிக் கொண்டு தைரியமாய் திருப்தியாய் சமாதானமாய் வாழ்ந்த ஒரு விசுவாசப் பெண்மணியிடமிருந்து நல்ல அனுபவங்களை நாம் கற்றுக் கொள்வோம்.

வேதத்தில் தேவனால் எடுத்துப் பயன்படுத்தப்பட்ட பெரிய தீர்க்க தரிசிகளில் ஒருவரான எலிசாவின் நாட்களில் சூனேமில் வாழ்ந்த கனம் பொருந்திய ஒரு ஸ்திரியின் அனுபவத்தைப் பார்ப்போம். இச்சரித்திரம் 2இராஜா. 4:8-37; 8:1-6 ஆகிய பகுதிகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது. சூனேமியாளாகிய இவள் வாழ்ந்த நாட்களில் தேசத்தில் 7-வருடங்கள் கடுமையான பஞ்சம் ஏற்பட இருந்தது. இந்தப் பஞ்சத்திலிருந்து சூனேமியாளின் குடும்பத்தைக் காப்பாற்றும்படியாய் தேவன் தன் ஊழியக்காரன் எலிசாவை அவளிடத்தில் அனுப்பி நீ உன் வீட்டாரோடுங்கூட எழுந்து புறப்பட்டுப் போய் எங்கேயாகிலும் சஞ்சரி. கர்த்தர் பஞ்சத்தை வருவிப்பார். அது ஏழு வருடங்கள் தேசத்தில் இருக்கும் என்று சொன்னார். இங்கு தாவீதின் அனுபவ வார்த்தைகள் எவ்வளவு உண்மை என்று பாருங்கள். தமக்குப் பயந்து தமது கிருபைக்கு காத்திருக்கிறவர்களின் ஆத்துமதக்களை மரணத்திற்கு விலக்கி விடுவிக்கவும் பஞ்சத்தில் அவர்களை உயிரோடே காக்கவும் கர்த்தருடைய கண் அவர்கள் மேல் நோக்கமாயிருக்கிறது, (சங்33:18,19) என்று வேதத்தில் எழுதிவைத்துள்ளார். இப்படிக் கர்த்தருடைய நினைவில் சூனேமியாளும் அவள் குடும்பமும் இருந்தால் அவளுக்கு ஆலோசனை கொடுக்கப்பட்டது. அவளும் தேவ மனுஷன் சொன்ன வார்த்தையின்படியே செய்து தன் குடும்பத்தை ஏழுவருட பஞ்சத்திலிருந்து காப்பாற்றிக் கொண்டாள்.

பிரியமானவர்களே! சற்று கவனியுங்கள். அந்த சூனேம் ஊரில் எத்தனையோ பேர் வாழ்ந்து கொண்டிருக்க தேவனுடைய கிருபை, இரக்கம், தயவு கிடைக்க காரணம் என்ன? இப்படி கர்த்தருடைய நினைவில் தான் இருக்கும்படியாய் இவள் செய்த விசுவாச செயல்கள்தான் என்ன? என்பதை சற்று உற்று நோக்குவோம். ஏனெனில், கிரியைகளில்லாத (செயல்) விசுவாசம் செத்ததல்லவா? (யாக். 2:20).

**விசுவாச செயல்:1. தேவனைக் கண்டுபிடுக்கும்படி தனக்குக் கிடைத்த வாய்ப்புகளைச் சரியாய் பயன்படுத்திக் கொண்டாள்.**

சூனேமியாள் கனம் பொருந்தியவளாயிருந்த போதிலும் பெருமைக்கு இடங்கொடாமல் தேவனுடைய தீர்க்கதரிசி எலிசாவுக்கு முன் தன்னைத் தாழ்த்தி தன் வீட்டில் போஜனம் பண்ணும்படி வருந்திக் கேட்டுக் கொண்டாள். மேலும், தன் வீட்டு மெத்தையின் மேல் ஒரு சிறிய அறைவீட்டைக் கட்டி அதில் கட்டில் மேஜை நாற்காலி குத்துவிளக்கும் வைத்து அதில் எலிசா கேயாசியுடன் தங்குவதற்கு ஏற்பாடு செய்து கொடுத்தாள்.

இப்படிச் செய்து தேவ ஊழியரைக் கனப்படுத்தக் கிடைத்த வாய்ப்பை முழுமையாய் பயன்படுத்திக்கொண்டாள். *நன்றாய் விசாரனை*

*செய்கிற மூப்பர்களை விசேஷமாகத் திருவசனத்திலும் உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திராக எண்ணவேண்டும்* (1தீமோ. 5:17) என்ற தேவனுடைய விருப்பத்தை நிறைவேற்றினாள். இப்படித் தேவனைக் கனப்படுத்திய சூனேமியாளைத் தேவன் சும்மா விட்டு விடுவாரா? *என்னைக் கனப்படுத்துகிறவர்களை நான் கனம் பண்ணுவேன்* (1சாமு. 2:30) என்று வாக்குக் கொடுத்த தேவன் அவளைக் கனம் பொருந்திய ஸ்திரீ என்று பாராட்டியதோடு உற்சாகமாய் கொடுத்த அவளிடத்தில் பிரியம் வைத்து அவளுக்கு குழந்தை பாக்கியத்தைக் கொடுத்து, குறைவை நிறைவாக்கியதோடு *தாய்* என்ற கனத்தையும் கொடுத்து பெருமைப்படுத்தினார். மேலும், இப்படி நினைத்து நினைத்து கொடுத்து ஊழியரைத் தாங்கிய சூனேமியாளை ஏழு வருடப் பஞ்சத்தில் அவளைத் தாங்கும்படியாய் தேவன் அவளை நினைத்துப் பார்க்கிறார்.

அன்பானவர்களே! நாம் நம் தேவனைக் கனப்படுத்தப் பெற்றுள்ள வாய்ப்புகளை எண்ணிப்பாருங்கள். சபை கூடிவருதல், ஊழியரைக் கனப்படுத்துதல், ஊழியரோடு இணைந்து ஊழியம் செய்தல், காணிக்கை கொடுத்தல், ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துதல், ஏழை எளியவர்களுக்கு உதவி செய்தல் இப்படி நம் தகுதிக்கேற்ப அநேக வாய்ப்புகள் நமக்குக் கிடைத்துள்ளது. நாம் எந்தளவு இதில் ஈடுபாடு கொண்டு தேவனைக் கனப்படுத்தியிருக்கிறோம்? ஆதித்திருச்சபையார் சிதறடிக்கப்பட்டபோதும் அதையும் ஒரு நல்ல வாய்ப்பாகக் கருதி எங்கும் திரிந்து சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள் (அப். 8:4). பவுலின் நாட்களிலே பரிசுத்தவான்களுக்குச் செய்யப்படும் தர்ம ஊழியத்தின் பங்கைக் கொடுக்க வாய்ப்புக் கிடைத்த மக்கெதோனிய நாட்டுச் சபையார் *தங்களுக்கு ஏற்பட்டிருந்த மிகுந்த உபத்திரவதினாலே சோதிக்கப்படுகையில் கொடிய தரித்திரமுடையயவர்களாயிருந்தும் தங்கள் பரிபூரண சந்தோசத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய் கொடுத்தார்கள் என்று பார்க்கிறோம்* (2 கொரி. 8:2). இதனால் விசுவாசிகளின் தொகை 4000, 5000 திரளான ஜனங்கள் என்று பெருகிற்று.

மேலும், சபைகள் சமாதானம் பெற்று பக்தி விருத்தி அடைந்ததே தவிர அப் 9:31 ஒரு போதும் வெட்கப்பட்டு துக்கப்பட்டு நிற்கும்படி தேவன் அவர்களை விட்டு விடவில்லை. நாமும் கூட சாக்குப்போக்குச் சொல்லிக்கொண்டிராமல் தேவனைக் கனப்படுத்த கிடைத்த எல்லா வாய்ப்புகளையும் பயன்படுத்துவோம். தேவ மகிமைக் கென்று நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலுக்கும் பலன் உண்டு. *ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற் போகான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று குமாரன் இயேசு கிறிஸ்துவின் மூலம் தேவன் வாக்களித்திருக்கிறர்* (மத். 10:42) கொர்நெலியு செய்த ஜெபங்களும், தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாயிருந்தது என்று அப்போஸ்தலர் 10:4-ல் பார்க்கிறோம். ஆம் நாம் தேவனைக் கனப்படுத்தும்படியாய்ச் செய்கின்ற ஒவ்வொரு செயலையும் கர்த்தர் நினைத்திருக்கிறார். அவர் உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் வர்த்திக்கப் பண்ணுவார் (சங். 115:14)

(தொடரும்)

# மழையின் ரகசியம்

Bro. பாண்டியன்

**ஆ**ண்டவர் இயேசுவின் நாமத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக! இந்த வருடக் கடைசி வரையில் வழிநடத்தி வந்த தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. மழைக்காலம் முடிந்து குளிர்கால கட்டத்தில் காலம் தவறி மழையை நாம் அனுபவித்து வருகிறோம். இந்த மழைக்காக ஜனங்கள் பல்வேறு ஆன்மீக முயற்சிகள் செய்வதை உலகத்தில் காண்கிறோம். யாகம் வளர்த்தல், கழுதைக்குக் கல்யாணம் செய்தல் போன்ற அநேக காரியங்களைக் கேள்விப்படுகிறோம். ஆனால், வேதம் தெளிவாக ஒன்றை சொல்கிறது. புறஜாதிகளுடைய வீணான தேவர்களுக்குள் மழை வருஷிக்கப்பண்ணத்தக்கவர்கள் உண்டோ? அல்லது வானங்கள் தானாய் மழைகளைக் கொடுக்குமோ? எங்கள் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நீர் அல்லவோ அதைச் செய்கிறவர் (எரேமியா 14 : 22) என்று எரேமியா தீர்க்கன் வெளிப்படுத்துவதைக் கண்கிறோம். இதன்மூலம், விஞ்ஞானத்தாலும் மழையை வரவழைக்க முடியாது என்று காண்கிறோம்.

யோபு புத்தகத்தில் 37 : 13 ல் ஒன்றில் தண்டனையாகவும், ஒன்றில் தம்முடைய பூமிக்கு உபயோகமாகவும் ஒன்றில் கிருபைஆயாகவும் அவைகளை வரப்பண்ணுகிறார் என்று காண்கிறோம். சிருஷ்டிப்பின் ஆரம்பத்தில் மழையை தேவன் அனுப்பவில்லை. ஆனால், நதிகள் இருந்தன. பிற்பாடு மனிதருடைய இருதயத்தின் சிந்தனைகள் தேவனுக்கு விரோதமாகச் சென்ற போது தேவன் முழுஉலகத்தையும் ஜலப்பிரளயத்தினால் அழிக்க முடிவு செய்தார். அப்போது நோவாவுக்கு தேவனுடைய கண்களில் கிருபை கிடைத்ததால் அவனுக்கு அதைக்குறித்து முன்னமே எச்சரித்து பேழையை உண்டு பண்ணவும், குடும்பத்தையும், மிருகஜீவன்களையும் தப்புவிக்கவும் வழிசெய்தார். மனுஷனுக்கு அணையின் மதகையே பராமரிக்க முடியவில்லை. ஆனால், நம் தேவன் வானத்தின் மதகுகளையே திறந்து மூடுகிறவராக நாம் பார்க்கிறோம் (ஆதி 7: 10-12) இன்றைக்கு வானிலை அறிவிப்பு என்று ஜோசியக்காரனைப் போல வரலாம், வராமலும் போகலாம் என்று விஞ்ஞானம் வளர்ச்சியடைந்தாலும் உறுதியில்லாமல் தான் அறிவிக்கிறார்கள். ஆடுமாடுகள் கூட மந்தாரத்தை அறியும் என்று யோபு 36 கடைசியில் வாசிக்கின்றோம். அதைதான் பவுல் கொரிந்து சபைக்கு எழுதும்போது தேவன் இவ்வுலகத்தின் ஞானத்தை பைத்தியமாக்கினார் என்று எழுதுகிறார். வாசிக்கின்றோம். ஆவிக்குரிய காரியங்களை இவ்வுலகம் பகுத்து அறியாதிருக்கிறதைப் போலவே, தேவனுடைய கிரியைகளின் மகத்துவத்தையும் அறியாமல் இருக்கிறது.

நாம் ஏற்கெனவே பார்த்தது போல, ஒன்றில் உபயோகமாகவும் மழை பயன்படுகிறது. நோவா காலத்தில் ஜனங்களை அழித்த போது, தேவன் வருத்தப்பட்டு இனி இது போல வெள்ளத்தால் ஜனங்களை முழுமையாக அழிக்க மாட்டேன் என்ற உடன்படிக்கையின் அடையாளமாக வானவில்லை ஏற்படுத்தினார். ஒன்றை சிந்தித்துப் பாருங்கள்! இவ்வுலகம் நான்கு பாகமாக பிரிக்கப்பட்டால் அதில் மூன்று பாகம் தண்ணீரால் சூழப்பட்டிருக்கிறது. மனிதர்கள் இப்போதும் தங்கள் அக்கிரம நடக்கையால் தேவனைக் கோபப்படுதிக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஒருவேளை, தேவன் அந்த வானவில் உடன் படிக்கையை ஏற்படுத்தாமல் இருந்தால் இவ்வுலகம் அவருடைய கோபத்தால் மறுபடியும் அழிந்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. அதற்குப் பிற்பாடு எகிப்திரை தண்டிக்க கல்மழையை தேவன் அனுப்பினார் (யாத். 9 : 18). யோபு பேசும்போது தேவன் கல்மழையை தன் பண்டகசாலைகளில் (ஸ்டோர் ரூம்கள்) இருந்து அனுப்புவதாகத் தெரிவிக்கிறார். பூமியெங்கும் மனுஷர் குடியில்லா இடத்திலும் மழையை வருஷிக்கப்பண்ணி வெள்ளத்துக்கு நீர்க்கால்களையும் இடி மின்னலுக்கு வழிகளையும் பகுத்தவர் யார்? என்று கேட்கிறார் (யோபு 38 : 22-35). பூமிக்கு மழையை ஆயத்தப்படுத்துகிற தேவன் என்கிறார் சங்கீதகாரன் (147 : 8,9) யோசேப்பின் காலத்தில் உலக முழுவதும் பஞ்சம் ஏற்பட்ட போது, எகிப்து மட்டுமே செழிப்பாக இருந்தது. அதற்குக் காரணம், நைல் நதி என்ற வற்றாத ஜீவநதியாகும். பிற்பாடு தேவன் இஸ்ரவேலரை கானானுக்குப் போக வாக்களித்தார். அதைக்குறித்து அறிவிக்கும்போது எகிப்தில் செய்தது போல உன் காலால் நீர்ப்பாய்ச்சத் தேவையில்லை என்றும் கானான் தேசம் வானத்தின் மழைத் தண்ணீரைக் குடிக்கும் தேசம் என்று குறிப்பிடுகிறார் (உபா 11:10-15).

தொடர்ந்து கானான் தேசத்தைப்பற்றி பேசும்போது, அங்கே நீங்கள் என் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்தால் ஏற்ற காலத்தில் முன் மாரியையும், பின் மாரியையும் பெய்யப் பண்ணுவேன் என்றும், அந்நிய தேவர்களை நாடினால் அழிந்து போவீர்கள் என்றும் எச்சரிக்கின்றார். அன்றைக்கு மாத்திரம் அல்ல இன்றைக்கும் மழையைத் தருவது நமது தேவன் தான். ஒரு தேசத்தில் மழை குறையும் போது தேவனுடைய ஜனம் ஜெபித்தால் மட்டுமே மழையைத் தருவதாக தேவன் வாக்களித்துள்ளார் (2நாளா.7 : 13, 14). நல்லார் ஒருவர் இருந்தால் அவர் பொருட்டு மழைபெய்யும் என்பது உலக வாக்கு. ஆனால், உண்மையில் நீதிமான் ஒருவனாகிலும் இல்லை என்கிறது வேதம். தேவனே நல்லோர் மேலும் தீயோர் மேலும், சூரியனை உதிக்கப்பண்ணி நீதியுள்ளவர்க்ள மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார் என்று தமது மலைப் பிரசங்கத்தில் இயேசு ஆண்டவர் குறிப்பிடுகிறார். அந்த உதாரணத்தில் நாம் நம் சத்துருக்களையும் சிநேகிக்கவும் அவர்களுக்காக ஜெபிக்கவும் வேண்டும் என்று ஒரு புதிய சிந்தனையை வலியுறுத்துவதைப் பார்க்கிறோம்.

மேலும், சாமுவேல் காலத்தில் ஜனங்கள் தங்களுக்கு ஒரு ராஜாவை ஏற்படுத்தக் கேட்ட போதும் இடிமுழக்கங்களினால் அவர்களைக் கண்டித்தார். எலியாலின் ஜெபத்தால் மூன்றரை வருடம் மழை

கட்டளையிட்டார். காரணம், ஆகாப் அந்நிய ஸ்திரீயை விவாகம் பண்ணி, பாகாலை சேவித்து, விக்கிரக தோப்பு உண்டாக்கி இருந்தான். எலியாவின் காலத்தில் குடிக்கத் தண்ணீர் கிடைக்காத போது வாய்க்கால்கள் மட்டும் வெட்டி மழையில்லாமல் தண்ணீர்வரச் செய்தார் (2 ராஜா.3:20).

மழையை ஒப்பிட்டுப் பேசும்போது கொடுப்பேன் என்று சொல்லியும் கொடாமல் இருக்கிற வஞ்சகம் மழையில்லாத மேகங்களுக்கும் காற்றுக்கும் சரி என்றும் (நீதி. 25:14) அடை மழை நாளில் ஓயாத ஒழுக்கும் சண்டைக்காரியான ஸ்தீரியும் சரி என்றும் (நீதி 27:15) ஏழைகளை ஒடுகின்ற தரித்திரன் ஆகாரம் விளையாதபடி வெள்ளமாய் அடித்துக்கொண்டு போகிற மழையைப் போலிருக்கிறான் (நீதி 28: 3) என்றும் பல அருமையான உதாரணங்களைக் காணலாம். உபாகமம் 32:2-ல் உபதேசம் மழைக்கு ஈடாக ஒப்பிடப்படுகிறது. எப்படி மழை தாவரங்களை உயிர்ப்பிக்கிறதோ அதுபோல் உபதேசிக்கும் வேதம் ஆத்துமாவை உயிர்ப்பிக்கும் ஒன்றாக இருக்கின்றது. நாம் ஆண்டவர் இயேசுவின் உபதேசத்தினால் சுத்தமாகி அவரில் நிலைத்திருக்கும்போது மாத்திரமே கனிகொடுக்கமுடியும் (யோவான் 15:4,5) பின்மாரிக்காலத்து மழையைக் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொள்ளுங்கள்(சகரியா 10:1) தொழுதுகொள்ள எருசலேமுக்கு வராதவர்கள் மேல் மழை வருஷிப்பதில்லை (சகரியா 14:17,18) வாதையே அவர்கள் மேல் வரும் என்று எச்சரிக்கப்படுகிறோம். ஆகவே, ஆதி சபையார் வாரத்தின் முதல் நாளில் சபை கூடி உபதேசத்திலும் அந்நியோநியத்திலும் அப்பம் பிட்குதலிலும் ஜெபம் பண்ணுவதிலும் உறுதியாய் தரித்திருந்ததைப்போல நாமும் தவறாமல் சபைகூடி தொழுது தேவ ஆசீர் பெறுவோம். ★


**DEPARTMENT OF POSTS INDIA**

भारतीय डाक
Indian Post

As per the orders of Government of India it is mandatory to link. Aadhaar Number and Mobile Number in all Post Office Savings Bank Accounts before 31.12.2017. Hence the Account holders are requested to approach the nearest Post Office with Xerox copy of Aadhaar Card for linking their Aadhaar Card Number and Mobile Number in their savings Bank Account.

# ஒன்றான மெய்த்தேவன்

☆☆☆☆☆ Bro. E.A. Arumugam ☆☆☆☆☆

## 1. தேவன் ஒருவரே

இந்த உபதேசம் திருமறையினூடே அதிகமாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. தேவனை தனித்துவம் உள்ளவராகக் காட்ட யூதர்கள் பெரும்பாலும் உபாகமம் 6:4 ஐக் குறிப்பிட்டு அதை ஷேமா என்று அழைத்தனர். இவ்வசனம் சொல்லுகிறது இஸ்ரவேலே கேள். உன் தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்! இயேசுவும், கற்பனைகளிளெல்லாம் பிரதானக் கற்பனை என்னவென்றால் இஸ்ரவேலே கேள் நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர் என்றார் (மாற்கு 12:29). பத்துக் கட்டளைகளில் பிரதானக் கட்டளை என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம் என்பதுதான். ஏசாயா மூலமாக தேவன் அவரையன்றி உனக்கு வேறே தேவர்கள் இல்லையென்பதை நான் முந்தினவரும் பிந்தினவருந்தானே என்னைத் தவிர தேவன் இல்லையென்று முன்னறிவித்து எனக்கு முன்னே வரிசையாக நிறுத்தத்தக்கவன் யார்? என்றும் (ஏசாயா:44:6), நானே கர்த்தர், வேறொருவர் இல்லை என்னைத் தவிர தேவன் இல்லை என்றும் (ஏசாயா 45:5) சொன்னார்.

இதை ஒப்பிட்டு பவுல், 1கொரிந்தியர் 8:6-ல் பிதாவாகிய ஒரே தேவன் நமக்கு உண்டு என்றார். யாக்கோபு 2:19-ல் பிசாசுகளும் தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசிக்கின்றன என்று யாக்கோபு குறிப்பிட்டார். மூன்று உலகப்பொருட்கள் ஒன்றாகச் சேர்ந்திருந்தும், அவை மூன்றும் தனித்தனியே இருப்பது எப்படி என்ற குழப்பத்தைப் போலவே, தேவத்துவத்தைப் புரிந்து கொள்வதும் மனிதனுக்குப் பிரச்சனையாக உள்ளது.

நன்றி : சகோ. ஜெர்ரி பேட்ஸ்
“தேவத்துவம்” எனும் புத்தகத்திலிருந்து

### திரித்துவ கோட்பாடு சரியா?

கி.பி 2-ம் நூற்றாண்டில் தெர்த்துல்லு என்பவர் அறிமுகப்படுத்திய வார்த்தை திரித்துவம் (Trinity) மெய்யான தேவன் மூன்று தனித்தனி நபர்த்துவம் உடையவர் என்று விளக்கமளிக்க அவர் பயன்படுத்திய வார்த்தையே திரித்துவம். கி.பி 4-ம் நூற்றாண்டு வரை இந்த வார்த்தை சரியான முறையில்தான் புரிந்து கொள்ளப்பட்டிருந்தது. அதற்குப் பிறகு இதன் உண்மை அர்த்தத்தை மாற்றி, ஒரே தேவன் மூன்று பரிணாமங்களைக் கொண்டவர் என்று ஒரு உபதேசத்தைப் பதிவிட்டனர். அதில் தேவன் ஒரு தனித்துவம் மிக்கவர், அவரே குமாரனாகிய இயேசுவாக அவதாரம் எடுத்து வந்தார், பின்பு மரித்து உயிர்த்தெழுந்து பரலோகத்துக்கு போய்த் தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியாக வந்தார் என்ற நூதனக் கருத்தைப் புகுத்தினர்.

I. **திரித்துவக் கொள்கைக்காரர்கள் தவறாகப் பயன்படுத்தும் சில வசனங்கள் :**

**1. உபாகமம் 6:4**

" நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர் "

**2. யோவான் 17:3**

" ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன் "

**3. யோவான் 14:9**

"என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் "

**4. யோவான் 14 : 16, 18**

'' நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன். அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருள்வார். நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன், உங்களிடத்தில் வருவேன் "

மேற்குறித்த நம்பிக்கையைக் கொண்டிருப்பதால் அவர்கள் இயேசு சொன்னபடி இயேசுவின் நாமத்தில் பிதாவை நோக்கி ஜெபிப்பதில்லை. இயேசுவையே பிதாவாகிய தேவனாக்கி, அவரிடத்திலேயே ஜெபித்து அவருடைய நாமத்தினாலேயே ஜெபத்தை முடிக்கின்றனர். யோவான் 16:23-ல் அந்த நாளிலே நீங்கள் என்னிடத்தில் ஒன்றுங்கேட்கமாட்டீர்கள்மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வது எதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார் என்று இயேசு சொன்னார். இந்த அடிப்படை சத்தியத்தைக் கூட அவர்களால் புரிந்து செயல்படுத்த முடியவில்லை.

II. **இவர்களுடைய திரித்துவ நம்பிக்கைக்குக் காரணம் என்ன?**

தங்களிலுள்ள அறியாமையினாலே, திரித்துவக் கொள்கைகளை ஏற்றுக்கொண்டுள்ள இவர்கள் அதிலேயே ஊறிப்போனார்கள். மாம்சக் கண்ணோட்டத்தில் வசனங்கள் பேசும் ஒருவரே, ஒன்றான, ஒரே போன்ற வார்த்தைகளை நேரடியாக எடுத்துக் கொள்கின்றனர். தங்கள் கருத்தை மற்றவர்களிடம் திணிக்கவும் முற்படுகின்றனர். அவர்களுக்கு சாதகமாக இருக்கும் இப்படிப்பட்ட வசனங்களுக்கும் அவர்களுடைய நம்பிக்கைகளுக்கும் விளக்கமளிக்கும் முன், இந்த ஒன்றான மெய்த்தேவன் என்று திருமறை பேசுவதன் பின்னணியை நாம் ஆராய வேண்டும்.

பொதுவாகத் திருமறை பேசும் தேவன் எனும் பதம் முறையாக புரிந்து கொள்ளப்பட வேண்டும். பிதாக்களின் யுகத்தின் காலத்தில் ஆதாம் முதல் மோசே வரை இவர் மட்டுமே மெய்யான ஜீவனுள்ள தேவன் என்ற நம்பிக்கையோ, விசுவாசமோ இருக்கவில்லை. அந்தந்த நேரங்களில் தங்களுக்கு உண்டான அனுபவங்கள் மூலம் அவருக்கு (ஜீவனுள்ள தேவனுக்கு) காரணப் பெயர்களைக் கொடுத்து தொழுது கொண்டனர்.

## ஒன்றான மெய்த்தேவன் என்று ஏன் சொல்லப்பட்டது?

1. அஞ்ஞான தேவர்களுக்கும் மெய்யான தேவனுக்கும் உள்ள வேறுபாட்டைக் காட்ட, தேவன் ஒருவரே என்று வலியுறுத்த வேண்டியிருந்தது. ஆகிலும், இதன் பொருள் தேவன் முப்பரிமாணமுள்ள (பிதாவே குமாரன் குமாரனே பரிசுத்த ஆவி) என்ற திரித்துவ தேவனுமல்ல தனித்துவமுள்ளவரும் அல்ல.

2. அடுத்து வந்த மோசேயின் யுகத்தில், பிதாக்களின் யுகத்தைக் காட்டிலும் சற்று கூடுதல் விவரங்கள் தேவனைக் குறித்து வெளிப்படத்தப் பட்டது. மேசியாவை உலகிற்கு அனுப்புவதன் மூலம் இந்த மெய்த்தேவன் மனிதனுக்கு இரட்சிப்பைத் தருவார் என்று நூற்றுக்கணக்கான வசனங்களில் குறிப்பிடப்பட்டிருந்தும் வந்த மேசியாவை யூதர்கள் ஏற்றுக் கொள்ள மனதில்லாதிருந்தார்கள். இருதயங்களை ஆராய்ந்து அறிகின்ற தேவன் முன்கூட்டியே தேவன் ஒருமையில் பேசப்படும் பன்மைப் பொருளில் ஆதியாகமம் 1:1 லிருந்தே வெளிப்படுத்தினார். ஏனெனில், யூதர்களின் கருத்து : தேவன் ஒருவர்தானே இயேசு எப்படி அவருடைய குமாரனாக முடியும்? அவர் மரியாளிடத்தில் பிறந்தவர் தானே? அப்படி யிருக்கும்போது தச்சனாகிய யோசேப்புக்குப் பிறந்தவரை எப்படி தேவனாகச் சொல்லக் கூடும்? என்று யூதர்கள் கருதினர். இவர்களினிமித்தம் ஒருமையில் பேசும் பன்மையில் தேவன் என்பது ஏலோஹிம் என்று சொல்லப்படுகிறது. (எண்-430) இதுவே ஒருமையில் தேவன் என்பது ஏலோவா (Eloah) என்று எபிரேய மொழியில் சொல்லப்படுகிறது (எபிரேய எண் 433).

III. **திரித்துவக் கொள்கைக்காரர்களின் உபதேசம் தவறானது.**

1. ஏனெனில், உபாகமம் 6:4 ல் பேசப்படும் கருத்து, அன்று இருந்த ஜனங்களின் நம்பிக்கையைத் தவறு என்று சுட்டிக்காட்டும்படி, நம்முடைய தேவர்கள் பலரல்ல. நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர் என்று வலியுறுத்தப்பட்டது. இங்கே குறிப்பிடப்படும் தேவனாகிய கர்த்தர் என்பது ஒன்றுக்கு மேற்பட்ட நபரைக் குறிப்பிடுகிறது (எபிரேய பொருளகராதி எண் 3068). இதன் பொருள் யூதர்களின் தேசீய தேவனாகிய யாவே (யேகாவா) என்பவர் மட்டுமே தேவன், அவர் தாமாய் இருப்பவர். அதாவது, பல தெய்வ வணக்கமல்ல, உண்டாக்கப்படும் சிலைகளும் விக்கிரகங்களும் மெய்த்தேவனல்ல, அவர் ஒருவர் மட்டுமே மெய்த்தேவன். (மேலும் விளக்கங்கள் பின்வரும் பாடங்களில் தெரிந்து கொள்வோம்).

பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகிய தேவத்துவம் பல தெய்வக் கோட்பாடல்ல ஒரு தெய்வக் கோட்பாடு என்று பொருள்படுகிறது.

2. யோவான் 17:3 ஒன்றான மெய்த்தேவன் என்று கிறிஸ்து பிதாவாகிய தேவனை தனித்துவ நபராகக் குறிப்பிடுகிறாரா? இல்லை. ஒன்று, ஆன பிதாவும், குமாரனும், பரிசுத்த ஆவியுமாகிய தேவனையும் இந்த தேவத்துவத்திலிருந்து வந்த இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன் என்று இயேசு குறிப்பிட்டார். இன்று தங்களை கிறிஸ்தவர்கள், பிரசங்கியர்கள் என்று அழைத்துக்கொண்டு, கிறிஸ்துவை மட்டுப் படுத்துவது போலவே யூதர்கள் இயேசுவை மிக மோசமாக மட்டுப்படுத்தினர். பிதாவாகிய தேவன் மட்டுமே தங்கள் தேவன் என்பதை தங்கள் மனதில் ஆழப் பதித்துக் கொண்டார்கள். மேசியா வருவார் என்று

எதிர்பார்த்த அவர்களுக்குள் இயேசு பிறந்த போது அவர்கள் கற்பனை செய்து கொண்டிருந்த எந்த வெளிப்படைத் தோற்றமும் இயேசுவினிடத்தில் காணவில்லை.

இயேசு போதித்தவைகள் ஆவிக்குரியவைகளும், பரலோகத்திற்கடுத்த காரியங்களுமாயிருந்ததால், அவர்களால் புரிந்து கொள்ளக் கூடாததாயிருந்தது. தச்சனாகிய யோசேப்புக்கும் மரியாளுக்கும் பிறந்தவர் எப்படி பிதாவாகிய தேவனுக்கு குமாரனாயிருக்க முடியும் என்பதுதான் இவர்களுடைய குழப்பம். எனவே, அவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கொண்டிருக்கிற ஒன்றான மெய்த்தேவனையும் அவர் அனுப்பினவருமாகிய இயேசு கிறிஸ்துவையும் விசுவாசிப்பதே நித்திய ஜீவன் என்றார். பிதாவை மட்டும் விசுவாசிப்பதனால் நித்திய ஜீவனில்லை. குமாரனையும் ஏற்றுக்கொண்டு விசுவாசித்தால் மட்டுமே நித்திய ஜீவன் என்பதை குறிப்பிட்டார். இதன் பொருள் இருவரும் இரு வேறுபட்ட நபர் தத்துவம் என்பதே. ஒருவரை மட்டும் குறிப்பிடுவதில்லை.

யோசித்துக் கொண்டிருங்கள் மேலும் பல முக்கிய கருத்துக்களை ஆராய்வோம். மனிதனுடைய ஆவி, ஆத்துமா, சரீரத்திற்கு தேவனை ஒப்பிடலாமா?

(தொடரும்)

## நாளும் நடப்பும்

- **2018 மார்ச்சில் விண்ணில் ஏவப்படுகிறது சந்திராயன் 2 விண்கலம்**
  – இஸ்ரோ அறிவிப்பு
- **தமிழகத்தில் செயல்பட்டு வரும் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நர்சரி மெட்ரிக் மற்றும் சுயநிதிப் பள்ளிகளுக்கு அடுத்த ஆண்டு முதல் ஆன்லைன் முறையில் அங்கீகாரம்.**
  – பள்ளி கல்வித்துறை
- **பிளஸ் 2 பொதுத்தேர்வுக்கு தனித்தேர்வர்கள் டிசம்பர் 11 முதல் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்**
  – அரசு தேர்வித்துறை இயக்குனர்
- **பான்–ஆதார் இணைப்புக்கான காலக்கெடு மார்ச் 31 ஆம் தேதிவரை நீட்டிப்பு**
  – மத்திய அரசு
- **ஊராட்சியில் வழங்கப்படும் சான்றிதழ்கள் மட்டுமே குடியுரிமைக்கான ஆதாரம் அல்ல**
  – உச்சநீதிமன்றம்